# திருக்கோயில்



பிப்ரவரி
2003

விலை
ரூ 7.00







மயிலை அருள்மிகு தி[illegible]யா திருக்கோயிலில் 16.1.03 அன்று திருவள்ளுவர் திருநாள் விழா மிகச் சிறப்பாக நடைபெற்றது. சென்னை மாநகராட்சி துணை மேயர் திருமிகு கராத்தே ஆர். தியாகராஜன் அவர்கள் இவ்விழாவில் பங்கேற்று திருக்குறள் ஒப்புவித்தல் போட்டிகளில் வெற்றி பெற்ற மாணவ மாணவியருக்குப் பரிசுகள் வழங்கிச் சிறப்பித்தார்கள். சென்னை மாநகராட்சி பத்தாவது மண்டலக் குழுத் தலைவர் திருமிகு ஆர். இராஜேந்திரபாபு, ''திருக்கோயில்'' இதழாசிரியர் முனைவர் த. அமிர்தலிங்கம், அறநிலையத்துறையின் சென்னை உதவி ஆணையர் திருமிகு பி. வாசுநாதன், எம்.ஏ., பி.எல்., திருக்கோயில் தக்கார் திருமிகு ஞானசம்பந்தம், திருக்கோயில் செயல் அலுவலர் திருமிகு மோகனசுந்தரம் ஆகியோர் இவ்விழாவில் பங்கேற்றுச் சிறப்பித்தார்கள்.



# திருக்கோயில்

திங்கள் இதழ்




| | | |
|---|---|---|
| தனி இதழ் | : | ரூ. 7.00 |
| ஆண்டு உறுப்பினர் கட்டணம் | : | ரூ. 75.00 |
| ஆயுள் உறுப்பினர் கட்டணம் | : | ரூ. 1000.00 |

மாலை 45 | திருவள்ளுவர் ஆண்டு 2034 | சித்ரபானு - மாசி பிப்ரவரி 2003 | மணி 2



சிறப்பாசிரியர்

திருமிகு எம்.ஏ. கௌரிசங்கர், இ.ஆ.ப.

சிறப்பு ஆணையாளர் மற்றும் ஆணையாளர்

ஆசிரியர்

முனைவர் த. அமிர்தலிங்கம்,
எம்.ஏ., பி.எச்.டி

''திருக்கோயில்'' நிர்வாகக் குழுவினர்

திருமிகு எஸ். கனகய்யா, பி.எஸ்.சி., பிஎல்.
கூடுதல் ஆணையாளர்

திருமிகு த. சுந்தரம் பி.ஏ., பி.எல்.
இணை ஆணையாளர், தலைமை இடம்

திருமிகு ஆ. குப்புசாமி, பி.ஏ. பி.எல்.
ஆணையாளரின் நேர்முக உதவியாளர்

திருமிகு கே.கே. இராஜா, எம்.ஏ., பி.எல்.
இணை ஆணையாளர் - செயல் அலுவலர்
அருள்மிகு தண்டாயுதபாணி சுவாமி
திருக்கோயில், பழநி.


முகப்பு

**மயிலை அருள்மிகு முண்டகக்கண்ணி அம்மன்**

## பொருளடக்கம்


**சிவபுராணம்** - திருமந்திரச்செம்மல் டி.வி. வெங்கட்ராமன் இ.ஆ.ப. (ஓய்வு)

**சிந்தனை விதைகள்** - திருமிகு ச. சாவர்க்கர் இ.ஆ.ப. (ஓய்வு)

**இரண்டாம் திருமுறை** - முனைவர் த. அமிர்தலிங்கம்

**காலம் வரும் வரை காத்திரு (நீதிக்கதை)** - கலைமாமணி மா. இலட்சுமணன்

**வழிபாட்டில் தேன்** - டாக்டர் டி. செல்வராஜ்

**திருப்புகழை பாடக்கேட்டவர்** - திருப்புகழ்மாமணி மு. அருணகிரி

**சிவராத்திரி** - திருமதி மீனாட்சி கோகுலவாசன்

**சிவசரணம்** - கவிஞர் சொ.பொ. சொக்கலிங்கம்

**திருமூலமுனிவர் வரலாறு** - டாக்டர் சிவப்பிரியா

**எங்கும் நிறைந்தவன்** - திருமதி உமா சுப்பிரமணியன்

**குன்றத்தூர் அருள்மிகு சுப்பிரமணியசாமி திருக்கோயில்** - திருமதி இராஜேஸ்வரி விசுவநாதன்

**பரம பாகவத ஸ்ரீவேங்கடாத்ரி சுவாமிகள்** - திருமதி இந்திரா ஆராமுதன

**திருவாசகம் அருளிய மாணிக்கவாசகர் – ஒலிப்பேழை** – மதிப்புரை - அ. நிறைமதி பி.எல்.



உறுப்பினர் கட்டணம் அனுப்ப வேண்டிய முகவரி:

உயர்திரு ஆணையாளர் அவர்கள்

***திருக்கோயில்***

இந்து சமய அறநிலைய ஆட்சித்துறை

119, உத்தமர் காந்தி சாலை, சென்னை - 600 034.

தொலைபேசி: 8279407

# சிவ புராணம்

- "திருமந்திரச் செம்மல்" திருமிகு டி.வி. வெங்கட்ராமன், ஐ.ஏ.எஸ் (ஓய்வு)

**நவசிவாயம் வாழ்க! நாதன்தாள் வாழ்க!**

திருவாசகத்திற்கு உருகாதார் ஒரு வாசகத்திற்கு உருகார் என்பது சைவ மரபு. பறவைகளும் கொடிய விலங்குகளும் திருவாசகத்தினைக் கேட்ட மாத்திரத்திலே அருள் நலம் பெறும் என்பர் அருட்சோதி வள்ளலார். இந்நூல் இறைவனும் ஆன்மாவும் இணைய ஒரு பாலமாக இருக்கிறது. திருமுறைகளில் எட்டாம் திருமுறையாகத் திகழ்கிறது. இவ்வாசகம் மணிவாசகப் பெருமானுக்கும் எம் பெருமானுக்குமிடையே உயிருக்கு உயிராய் உள்ளத்துக்குள் உள்ளமாய் எழக்கூடிய ஒரு உரையாடல்.

மணிவாசகர் பாண்டிய மன்னனிடம் அமைச்சராகப் பணிபுரியும் போது போர்க்குதிரைகளை வாங்கச் சென்றவர், திருப்பெருந்துறையில் ஞானாசிரியரைச் சந்தித்து உடல் பொருள் ஆவி மூன்றினையும் ஈந்து சிவப் பரம்பொருள் ஞானாசிரியராக வந்த நிலையிலே தன்னை அர்ப்பணித்து உலக நிலை மாறி அருள் நிலைக்கு வந்தவர். திருக்கழுக் குன்றத்திலே முழுமையான முற்றறிவு பெற்றவர். அங்கு அவரை அருள் தாக்கிற்று. திருப்பெருந்துறை பெருமானின் பெருமையைத் தன்னுடைய சிறுமையோடு ஒப்பிட்டு நோக்கி எம்பெருமானின் வாரி வழங்கும் அருளை அனுபவிக்காமல் தடுக்கும் தன் குற்றங்களால் விளைந்த வினைகளைச் சிந்தித்துப் பார்க்கிறார் எனினும் தன்னை ஆட்கொண்ட பெருமானின் பெருநிலையை எண்ணி, அடைக்கலப் பத்தில்

நானேயோ தவஞ்செய்தேன்
சிவாய நமஎனப் பெற்றேன்

என்று பாடி வியக்கின்றார்.

தவம் செய்தலாவது உள்ளத்தைத் தூய்மையாக்கி, தவத்தின் வலிமை அடிப்படையிலே உடலையும் உயிரையும் இணைத்து இரண்டையும் இறைவனோடு சேர்த்துக் கொள்ளவேண்டும். இதன் முயற்சியே யோகமாகிறது. யோகத்திலே தன்னை நிலை நாட்டிக் கொள்ளும்போது மெய்ஞ்ஞானத்தின் நான்கு படிகளையும் (சாலோகம், சாரூபம், சாமீபம், சாயுச்யம்) ஒருங்கே இணைத்துக் கொள்ள வேண்டும். நான்கு நிலைகளிலே வாழ்க்கை இணையும் போது தவம் முற்றுகிறது. தவமின்றி ஞானம் கிட்டாது. ஞானத்தில் ஞான சரியை, ஞான கிரியை, ஞான யோகம், ஞான ஞானம் எனப் பேசப்படுகிறது. ஞானமும் நான்கு நெறியும் (சரியை, கிரியை, யோகம், ஞானம்) சேர்ந்திருக்கும் போது எதிர்பார்க்கும் அனுபவம் கிடைக்கும். அற்புதத் திருவந்தாதியில் காரைக்கால் அம்மையார் தாம் சிறுவயதிலேயே சரியை முதல் யோகம் ஈறான நான்கு நெறிகளைப் பயின்று ஆழ்ந்ததாகச் சொல்கிறார். ஆனால் ஞானத்தில் ஞானமாய் நின்றவர் மணிவாசகப் பெருமான் : இவர் இறைவனை நேரிடையாகக் கண்டவர். அவரது அனுபவ நிலைகளை மாணாக்கர்களுக்கு எடுத்துச் சொல்லும் பாங்காகத் திருவாசகப் பாடல்கள் எழுந்தன.

திருவாசக நூலில் சிவபுராணம் இடம் பெறுகிறது. சிவபுராணம் சொக்கலிங்கப் பெருமான் திருக்கோயிலிலே பாடியதாகச் சொல்லப்படுகிறது. இந்நூல் இறைவனின் அனாதி முடிவைச் சொல்வது. ஆதியந்தம் இல்லாத பழமையுடையவர் பரம்பொருள்.

'முன்னைப் பழம்பொருட்கும் முன்னைப்
பழம்பொருளே'

என்று திருவெம்பாவை முரசிடும்படியான ஒப்பற்ற அனுபவப் பிழிவே சிவபுராணம் என்பது முழுக்க முழுக்க உண்மை. சிவபுராணத்தைப் படித்தாலே திருவாசகம் முழுமையும் படித்ததற்குச் சமம்.

மெய்கண்டார் சிவஞான போதத்தில் பெருமானை 'அந்தம் ஆதி' என்று குறிப் பிடுகின்றார். அவர் தம் நூலில் அந்தத்தினை முதலில் வைத்து ஆதியைப் பின்னால் வைக்கிறார். எம்பெருமான் ஒன்றுமில்லாத சங்கார நிலையில் இருப்பவர். எப்பொழுதும் இருக்கக் கூடியவர். முடிவில்லாதவர், என்ற பொருளிலே சொல்கிறார். இறப்பே ஒருவனது உறக்கம் என்று வள்ளுவம் சொல்லும். தாய் தந்தை வாயிலாக உயிரையும் உடலையும் சேர்த்து பிறக்கச் செய்கின்றார் இறைவன். தனி நிலையிலே இறைவனிடம் எவ்வளவு அருகாமையில் இருக்கின்றோம் என்று சிந்தித்துக் கொண்டு

இறப்பதே இறப்பு. இறப்பு தனித்தன்மையான நிகழ்வு. உயிர் பல பிறவிகளாக உடல்களில் சேர்ந்து வந்தாலும் முடிவு இறைவனின் திருவடி சேரவேண்டும் என்பர் ஆன்றோர் பெருமக்கள். இவ்வாறு மணிவாசகர் இறைவன் பெருமை, தன் சிறுமை - இரண்டையும் சீர்தூக்கி திருவருளால் மெய்ஞ்ஞானத்தைப் பெற்று பெருமானை வாழ்த்து வதன் மூலமாக நற்குணங்கள் மேலோங்கி அவருடன் இணைய வேண்டும் என்ற குறிக்கோளுடன் சிவ புராணத்தை 'நமசிவாயம் வாழ்க' என்று தொடங்குகிறார்.

நமசிவாயமாவது இறைவனின் நாமம். 'நமசிவய' - இது ஐந்தெழுத்து மந்திரம். இம் மந்திரத்தை வாயில் சப்தம் வெளி வராமல் முணுமுணுத்தால் சூட்சுமம். உள்ளத்திலே திரும்ப திரும்பச் சொல்ல இன்னும் தூய்மையான நிலைக்குச் செல்கிறது. இதனை வெகு காரண பஞ்சாட்சரம் என்பர். இதன் கடைசியிடம் நாதமாகத் திகழ்கிறது. நாதத்தை ஒலியுடன் ஓசையுடன் ஓசையாக அனுபவிக்கிறார்கள். ஒலிக்கும் ஓசைக்கும் பொருளில் வேறுபாடு உண்டு. 'ஓம்' என்று சொல்லப்படும் பிரணவம் வேத மந்திரத்திற்கு மூலம். பிரணவம் சம்ஷ்டியின் சேர்க்கை. விரித்த நிலையில் வியட்டியாகும். 'ஓம்' என்ற சொல்லைப் பிரித்தால் அகரம், உகரம், மகரம், விந்து, நாதம் என்று குட்சும பஞ்சாட்சரங்களாக விரித்து சொல்வார்கள். ஓமின் விரித்த எழுத்துக்களும் 'நமசிவய' எனும் ஐந்தெழுத்துக்களும் ஒன்றே. இது மூலமந்திரமாகக் கணிக்கப்பட வேண்டும். இது தத்துவ ரீதியிலே கணிப்பது அல்ல. ஒலியாக, ஓசையாக அனுபவிக்கப்படுவது. இதனை அனுபவித்தவர்கள் அனுபவித்தார்கள். 'எழுத்து' உள்ளத்தைத் தாக்குகிறது. இவ்வைந்தெழுத்துக்கள் தூ ல, சூட்சும, அதி சூட்சும, காரண, மகா காரணம் என்ற ஐந்து படி நிலைகளாக உள்ளன. அடிப்படை பொருளாகிய பரம்பொருளின் அமைப்பிலே மிக மிக துல்லிய மான அலைகளாக இவ்வைந்தெழுத்து அமைகிறது.

| | | |
|---|---|---|
| நமசிவய | - | தூ ல ஐந்தெழுத்து |
| சிவயநம | - | சூட்சும ஐந்தெழுத்து |
| சிவயசிவ | - | காரண ஐந்தெழுத்து |
| சிவய | - | மகா காரண ஐந்தெழுத்து |
| சிகாரம் | - | மகாமனு |

இதில் சிகாரம் ஓரெழுத்தாக மட்டும் அமைந்திருக்கும். இவ்வாறு பஞ்சாட்சரங்களைச் சான்றோர்கள் பல நிலைகளில் அமைத்தார்கள். அதனை உணர்ந்து அனுபவிக்கவேண்டுமென்பது ஆன்றோர்கள் வாக்கு.

மேலும் பஞ்சாட்சரங்களைக் கீழ்கண்ட வாறும் பொருள் கொள்ளலாம்.

**சி = சிவம் : வ = சக்தி : ய = உயிர்.**

**சி = முதல்வன் : வ - அருள் : ய = உயிர் -** இவற்றுள் 'நம' எனும் எழுத்துக்கள் முன்னே நிற்கின்றன. ந = மறைப்பு அல்லது திரோதானம் ம = உயிருடன் அநாதியாக தொன்று தொட்டு இயைபுடைய மும்மலங்கள். மகாரம் மூல மலமான ஆணவத்தையும், அதனோடு பிணைந்துள்ள கன்ம, மாயைகளையும் சேர்த்து மும்மலச் சேர்க்கையைச் சுட்டுகிறது. உயிரைப் பொறுத்த வரையில் சகச நிலை. சகச நிலையில் ஆன்மா 'நமசிவய' என்ற எழுத்துக்களோடு இணைந்து நிற்க வேண்டும். அடுத்த நிலையில் சான்றோர்கள் தனித்தனியே எடுத்துச் சொல்லி உணரச் செய்வார்கள். இவ்வாறு ஒவ்வொரு எழுத்தையும் உணர வேண்டும்.

எனவே மணிவாசகர் சிவபுராணத்தைத் தொடங்கும் போது 'நமசிவாய' என்று தொடங்கியிருக்கிறார். முதல் எழுத்துக்களான 'நம' எனும் பதம், அறியாமையினை - மலங்களை உணர்த்துகின்றன : மூலமலம் ஆணவம் : ஆணவத்தால் கன்மம் விளைந்து துன் புறுத்துகின்றது : இவைகளை விளக்க அருள் அல்லது ஞானம் அருளச்செய்ய வேண்டும் இறைவா என்று சொல்லும் வகையிலே நமசிவயத்தைத் தொடங்கியிருக்கிறார் மணிவாசகர். இம்மந்திரம் கூறி மந்திர தீட்சை செய்வார் ஞானாசிரியர். இம்மந்திரத்தைத் தலையாக எடுத்துக்கொண்டு நிற்பது தீட்சை. தொடக்கத்திலே ஞானாசிரியர்கள் எல்லோரும் தொடங்குவது 'நமசிவய' மந்திரம். எல்லாவற்றிற்கும் வழிகாட்டியாக இம்மந்திரம் அமையும். இம் மந்திரத்தின் இறுதியில் இருளான ஆணவம் வலிமை குன்றிவிடும். தோன்றாத் துணையாக சிவ சக்தி நம் மோடு இருந்து கொண்டு அருள் புரிவாள்.

'சிவய சிவ'

எனும் இம்மந்திரத்தில் மலங்கள் மறைந்து விடுகின்றன. மறைப்புச் சக்தியான திரோதானம் (மகாரம்) அருள் சக்தியாக நின்று (வகாரம்) மறைந்து ஞானமாக நிற்பது 'சிகாரம்'. இச்சிகாரத்தை 'மகாமனு' என்று சொல்வார்கள்.

'நமசிவய' என்று சொல்லும்போது ஒலியாக, ஓசையாக சொல்வர். இம்மந்திரம் இறைவனின்

சொரூபம் என்று சொல்லக்கூடிய நேரத்தில் மந்திர சொரூபமாகும். திருச்சிற்றம்பலத்தில் 'நமசிவய' என்ற மந்திர சொரூபமாக ஆடும் நடனம் ஊன நடனம். காரண பஞ்சாட்சரமான சிவயசிவ என ஆடும் நடனம் ஞான நடனம். ஐந்தொழில் இயக்கத் திற்கு மூலக் காரணமாவது ஊன நடனமே. இறைவன் வலக்கையில் இருக்கக்கூடிய உடுக்கையை ஆட்டும் போது எழக்கூடிய ஒளி ஊன நடனத்தால் ஆடும் ஒலி. நடராஜ தத்துவத்திலே இறைவன் ஒரு கால் ஊன்றி ஒரு கால் தூக்கிய பாதமாக ஆடுகிறார். ஊன்றிய திருவடி முயலகனை அழுத்தி நிற்கிறது. இது ஆணவ மலத்தை அழுத்துவதைக் குறிக்கும். இங்கு திரோதன சக்தி பயன்படக் கூடிய அருட் சக்தியாகத்தான் இறுதியில் அமைகிறது. அழுத்தும் போது உண்டாகும் ஒருவிதமான ஒலி படைப்புத் தொழிலிருந்து மாறுபட்ட அருள் தன்மையுள்ள ஒரு ஒலி. உயிரில் படிநிலை வளர்ச்சி ஒலியாக அமைகிறது. ஒலி, பக்குவநிலையில் சத்திநிபாதம். திருவருள் மேலும் மேலும் வந்தடையும் போது ஒலி ஓசையாகிறது. இது திருச்சிலம்போசை பதிந்திருந்த பாதஒலி. இவ்வோசை தூக்கிய திருவடியின் சிலம் போசை. இவ்வோசையை சேரமான் பெருமாள் அரண்மனையில் கேட்டறிந்தார். சிதம்பர திருநடனம் கேட்ட பிறகே தமது பூசையை முடிப்பார். இவருக்கு கழறிற்றறிவார் என்ற பெயருமுண்டு. ஒரு நாள் இவருக்கு சிலம்போசை கேட்கவில்லை. எனவே வருத்தப்பட்டார். பெருமான் அதற்கு உத்தரம் சொன் னார். பிறகு அவ்வோசை தொடர்ந்து கேட்டது. சுந்தர னார் பாடிய இசை உள்ளத்துள் ஒலித்ததால் திருச் சிலம்போசையை சேரமானிடம் உணர்த்தவில்லை யென்று கூறி அருளுகிறார் எம்பெருமான். மந்திர சொரூபத்தின் மூலவொலி உயிர் பக்குவத்திற்கேற்ப ஓசையாக மாறுகிறது.

ஞான சம்பந்தரும் இறுதி கட்டத்தில் தமது திருக்கடைக்காப்பில்,

காதலாகி கசிந்து கண்ணீர் மல்கி
ஓதுவார் தம்மை நன்னெறிக்கு உய்ப்பது
வேதம் நான்கினும் மெய்ப்பொருளாவது
நாதன் நாமம் நவசிவாயவே

என்ற நமசிவாயப் பதிகத்தைப் பாடுகையில் நான்கு வேதங்களில் மெய்ப்பொருளாகத் திகழ்வது 'சிகாரம்' எனும் மகாமனு மந்திரம். இம்மந்திரம் செந்தழல் ஓம்பிய செம்மை வேதியரின் அந்தியுள் நின்று ஒலிக்கிறது என்று 'அஞ்செழுத்து பதிகத்திலும் குறிப் பிட்டுள்ளார். எனவே இம்மந்திர ஒலி உயிர்ப்பை அடக்கி தவ நிலையில் நின்று செய்யக்கூடிய தொன்று. இறைசொரூப நிலையே நமசிவாயம். இவ்வாறு எம்பெருமானின் திருநாமமாக, மந்திர மாக, ஒலி ஓசையாக, மூலவொலியாக, மூலவோசை யாக மற்றும் பர சொரூபமாக அமைவது 'நமசிவாய' மந்திரம். ஆதலால் மணிவாசகர் சிவபுராணத்தை மகாமனு மந்திரமாக ஒளிரும் இறைவனை வாழ்த்தி, 'நமசிவாய வாழ்க!' எனத் தொடங்குகிறார்.

'நமசிவாய வாழ்க!' எனப்போற்றிய மணி வாசகப் பெருமான், அடுத்து ''நாதன்தாள் வாழ்க!'' என வாழ்த்துகிறார்.

நாதன் - தலைவன் எனப் பொருள்படும். பிரபஞ்சத்தை உருவாக்கியவன் : உருவாவதற்கு மூல காரணமாக யிருக்கக்கூடியவன் : இறுதியில் தன்னுள் ஒடுக்குபவன் அவனேயாதலால் அவனே தலைவன். ஒரு பணியில் ஈடுபட்டு அப்பணியின் ஒரு பகுதியோடு நின்று விட்டால் அவன் தலைவன் ஆகமாட்டான். ஐந்தொழில்களை (படைத்தல், காத்தல், அழித்தல், மறைத்தல், அருளல்) அருளால் அவனே நடத்து கின்றான். எல்லாவற்றையும் தனதாக்கிக் கொண்டு (கொள்ளும்) சிவபரம்பொருள் பிறப்பிப்பதற்கும் முழு காரணமாகயிருக்கிறான். எல்லாம் மறைந்த பிறகு வெளி கொணர வேண்டிய ஆற்றலுக்கும் காரணமாகிறான். எல்லாவற்றையும் தனக்குச் சொந்த மாக்கி சொந்தக்காரன்ஆகிறான். எனவே தலைவனாக யிருக்கிறான். உற்பத்திக்குக் காரணமாகயிருந்தவை, இருப்பவை அனைத்திற்கும் மூலமாகி, உண்டானவை தனு, கரண, புவன, போகம். இவற்றையளித்து, துய்க்கக் கருவிகளைப் படைத்து, அதற்கான பிரபஞ்சத் தையும் படைத்தவன். எனவே அனைத்தும் அவன் உடைமைகள். பிரபஞ்ச மூலகாரணமாகவும் படைத்து, காத்து, அழித்து, மறைத்து அருளை வாரி வாரி வழங்கும் தலைவன். நாம் அவனது அடிமைகள், வேலையாட்கள். உலகப் பொருட்கள் அவன் உடமை கள். நம்முடைய சிறுமையையும் அவனுடைய பெருமையையும் தெரிந்து கொள்வது பக்குவ நிலை. இந்நிலையே படி வளர்ச்சி. கல்வியின் சிறப்பால் தலைவனாக நினைப்பது அறியாமை அல்லது அஞ் ஞானம். மூல மந்திர சொரூபம் உள்ளத்திலே உணர்ந்த நிலையிலும் அருவமாக நினைத்து உலகத் தில் காத்து படைத்து ஆண்டு கொள்ளப்படுபவன் தலைவன்.

'ஈஸோ வாஸ்யம் இதம் ஸர்வம்' - ஈஸோபநிஷத்

என்கிறது வேத வாக்கியம். சர்வத்திற்கும் தலை வனே நாதத்தின் தலைவன். நாதத்திற்குக் காரண மாகி அப்பாலும் நிற்பவன்.

'நாதமோடு ஆடினான் நாதாந்த நட்டம்'

என்பர் திருமூலர்.

நாதம் என்று சொல்லக்கூடிய ஒன்று தத்துவமாக சைவத்தில் சொல்லப்படுகிறது. கருவி கரணங்களைக் கடந்து பெறும் உண்மை அனுபவம் நாத நிலை. கருவிகளைப் பயன்படுத்திக் கொண்டுதான் குறிக்கோளை அடைகின்றோம். 'நாதம்' என்று சொல்லக்கூடிய தத்துவம் முப்பத்தாறு தத்துவங்களில் கடைசி தத்துவம். கீழ் நிலையில் உடலோடு சேர்ந்த ஆத்ம தத்துவங்கள் 24. இதன் விரிவு 'உண்மை விளக்கம்' எனும் சைவ சித்தாந்த சாத்திர நூலில் காணலாம். கருவிகளை உயிரானது இயக்குகிறது. உயிர் இயக்கக் காரணமாகயிருக்கக் கூடியவை வித்தியா தத்துவங்கள் ஏழு. சூட்சும நிலையில் புலன்களோடு அந்தக் கரணங்கள் இணைந்து கருவிகளை இயக்க ஈடுபடும். அடுத்த சிவ தத்துவங்கள் ஐந்தில் கடைசி தத்துவங்களாக விந்து நாதம் பேசப்படுகிறது. விந்து தத்துவத்தின் மூலமே ஆத்ம தத்துவம் இயங்குகிறது.

இவ்வாறு சிவ தத்துவத்தில் இறுதியாக நிற்பது நாதம். கருவிகள் ஒடுங்கி இறுதியில் பெறும் அனுபவம் நாதம். நாதம் இசையாகவும் பரிணமிக்கிறது. ஒலி ஓசையாகவும் வெளிப்பாடு செய்கிறது. ஒலி, ஓசை அனுபவத்தில் ஈடுபட்ட காலத்திலும் அதை விட்டு கடந்து என்ன அனுபவம் இருக்கிறது எனப் படியேறுதல் கடமை. இதைத் தாண்ட வேண்டும். நாத தத்துவம் கடந்த நிலை நாதாந்தம். இங்கு சீவன் இறைவனைச் சந்திக்கிறது. இச்சந்திப்பினைப் பெற்ற மணிவாசகர், 'நாதன் தாள் வாழ்க!' என்கிறார். யோகப் பயிற்சியின் வாயிலாக குண்டலினி ஆற்றலை தம்முள்ளேயே உயர்த்தி சிரசிற்கு மேற்பட்டு இருக்கக்கூடிய இடத்தில் - மீதானம் இடத்திற்கு எடுத்துச் சென்று உணர்ந்தால் 'நாதம்' என்ற அனுபவத்தைப் பெறலாம் என்று திருமந்திரம் சொல்கிறது. இந்நிலை அடைய எல்லா வற்றினையும் கடந்து அப்பாற்பட்டு இருக்க வேண்டும்.

மற்றும் சிவ சக்தி - இரண்டின் பரிணாமமாக அமைவது நாத விந்து. விந்து பொருள் உலகம் : நாதம் சொல்லுலகம். சொல்லுலகம் ஒலி உலகமாகவும் ஓசை உலகமாகவும் சூட்சுமமான நிலையில் தலைமையிடத்தில் வைக்கப்பட்டுள்ளது. பராபரை என்று சொல்லக்கூடிய சக்தியோடு இணை பிரியாத நிலையில் அமைகிறது. நடனம், ஞான நடனம் - இவைகளுக்கு அப்பாற்பட்ட 'உமாபதி சிவம்' சொல்லக்கூடிய நடன அனுபவங்களே திருவடிகள் அல்லது தாள்கள்.

திருவடிகளுக்குப் போற்றி செய்வது சைவ சித்தாந்த வழக்கம். திருத்தாள் பார்த்து வாழ்த்தி வணங்கி அதனில் நிலைத்து வாழ வேண்டும். மெய்ஞ்ஞானமே திருவடிகள். தோன்றாத் துணையாக யிருந்து கொண்டு திரோதான சக்தி அருட் சக்தியாக யிருக்கக் கூடிய நிலை. திருவடிகளாகப் பெறப்படுகின்றன. சைவத்தின் அடிப்படை வழிபாடு - திருவடிகள்.

திருவடிகள் ஞானமாகவும் அருளாகவும் அனுபவிக்கப்படுகின்றன. ஞான அருளை ஒரு சேரப்பெறுவதை இரு தாள்கள் குறிக்கின்றன. ஞானமும் அருளும் சேர்ந்து வந்து நெருங்கிய நிலையைத் தமதாக்கிக் கொண்டு நம்மோடு இருக்கக் கூடிய நிலை வாழ்க என்கிறார் மணிவாசகம். இரு தாள்கள் சிரசு என்று சொல்ல கூடிய தலையில் பதிவது பரிச தீட்சை. சீடன் தலைமேல் வைத்து உபதேசம் செய்வது. தாளும் தலையும் சேர்ந்த நிலையே தாடலை - சீடன் தலையும் இறைவன் தாள்களும் சேர்ந்த நிலை. இதனை திருவடி தீட்சை. தாடலை அனுபவம்; அத்வைத அனுபவம். இரண்டும் இணை பிரியாமல் ஒன்றோடொன்று இணைந்து பிரிக்க முடியாமல் இருக்கக் கூடிய நிலை. உயிரும் உடலும் சேர்ந்து இருக்கக் கூடிய, இறைவனைத் தவிர வேறொன்றுமில்லை என்ற தனிப் பொருளாக அமைந்த அத்வைத அனுபவ நிலை ஆகும்.

இந்த அனுபவத்தை அப்பரடிகள் பெறுகிறார். கயிலையில் இறைவனைக் காண நாட்டத்தால் செல்கிறார். பாதி வழியில் ஓர் அந்தணர் தோன்றுகிறார். அப்படி கை கால்கள் கொண்டு மலையேறியதால் அவை தேய்வுற்றிருந்தது. அது கண்ட அந்தணர் அருகிலுள்ள திருக்குளத்தில் குளித்தால் திருக்கயிலாயக் காட்சியைக் காணலாம் என்கிறார். இதுவே திருவையாறு காட்சி. அக்காட்சியில் விலங்கினங்கள் ஆணும் பெண்ணுமாகக் காணப்படுகின்றன. இக்காட்சிகளைக் கடந்து இறைவனை நோக்குகிறார். அவரது உலகில் வேறு வேறு நிலையில் சிவ சக்தியானது எல்லாம் பிரபஞ்சத்திலே இரண்டு வேறு வேறு நிலையில் இருக்கக் கண்டு களிக்கின்றார்.

''கண்டேன் அவர் திருப்பாதம்
கண்டறியாதன கண்டேன்''

என்று தேவாரத்தில் அவ்வனுபவத்தைப் பெற்றதாகக் கூறுகிறார். ஒருமை நிலை இரண்டு நிலைகளாக மாறுகிறது. உயிரானது இறைவனோடு பிரிவில்லாமல் உணர்ந்து கொண்ட அருவுணர்வே திருப்பாதம். இருமை கண்டு ஒருமை வந்து ஒருமையடைந்த நிலை நாதத்தின் இருப்பிடம். நாதன் இருப்பிடம். நாத ஒலி மூல ஒலி, மூல வொலிக்கு மூல காரணம் நாதம். அதன் இருப்பிடமான நாதனை உணர்ந்த மணிவாசகப் பெருமான், 'நாதன் தாள் வாழ்க!' என வாழ்த்தி வணங்குகிறார்.

***

# சிந்தனை விதைகள்

- திருமிகு ச. சாவர்க்கர், இ.ஆ.ப., (ஒய்வு)

செயலாளர் - உறுப்பினர், வரிசீரமைப்பு மற்றும் வருவாய் மேம்பாட்டுக் குழு, தமிழக அரசு.

(முன் தொடர்ச்சி)

## கடவுள்

15. யாரும் நினைக்கின்ற வேண்டுகோளை இறைவன் அறியமுடியுமாதலால் பிரத்தியேகமாக எங்கும் சென்று அதைத் தெரிவிக்க வேண்டியதில்லை. தெரிவித்தாலும் குற்றமில்லை.

16. இறைவன் ஆரம்ப கட்டத்தில் ஒரு பக்தனுக்கு நல்வினைக்குரிய நற்பயனை அளவிற்கு அதிகமாகவும், தீவினைக்குரிய துன்பத்தை கருணையின்பால் குறைவாகவே கொடுக்கிறார்.

17. எளியவிலையில் எளிதில் உணவுப் பசியைப் போக்குவதற்கு சிறியதொரு மாத்திரை சாப்பிட்டால் போதும் என்கிற சூழ்நிலை இறையருளால் விரைவில் உருவாகலாம்.

18. போகியாக இருந்து இறைவனே அநாதியான உயிர்களுக்கு தூல உடல் கொடுத்து முதல் பெற்றோராக இருந்து மற்ற பெற்றோர்களை உருவாக்கியதால் இறைவன் ஒருவனாக இருந்தாலும் இறைவனை அம்பாளுடன் சேர்த்து வழிபடுகிறார்கள்.

19. குழந்தை கேட்பதையெல்லாம் தாய் வாங்கிக் கொடுப்பதில்லை. அதுபோல் கேட்பதையெல்லாம் இறைவனும் கொடுப்பதில்லை.

20. அநாதியான உயிர்களின் தரத்திற்கேற்ப இறைவன் உடல்கொடுக்க வேண்டியிருப்பதால் தவிர்க்க முடியாமல் விஷ ஜந்துக்களும் படைக்கப் பட்டுள்ளன.

21. துன்பப்படுகிறவர்கள் இறைவனைப் பழிப்பது சரியில்லை. என்றாலும் கடவுள் அதற்காக பிரத்தியேகமாகத் தண்டனை வழங்குவதில்லை.

22. திருமணம் செய்ய வாய்ப்பில்லாதவர்கள், திருமணம் செய்தபின் குழந்தைப்பேறு இல்லாதவர்கள் இறைவனுடைய சிறப்பு அன்புக்குப் பாத்திரமாவார்கள்.

23. இறைவன் சரணாகதர்களைத் தண்டிக்க முடியாததால் அதை இறைவனுடைய இயலாமை என்று சொல்வது நிந்தாஸ்துதி (நிந்திப்பது போல் புகழ்வது) என்றே கருத வேண்டும்.

24. இறைவனுடைய சொரூப லட்சணத்தை (உண்மையான தோற்றத்தை) அறிய முடியாததால் அருளாளர்கள் கண்ட உருவத்தில் இறையுணர்வுள்ளவர்கள் இறைவனை வழிபடுகிறார்கள்.

25. சிறிய தீப்பொறி பெருந்தீயாகப் பரவுவதுபோல் அணுவளவேயுள்ள மூலப் பிரகிருதியிலிருந்து இறைவன் அளவிட முடியாத இந்தப் பிரபஞ்சத்தைப் படைக்கிறார்.

26. மாணவனின் தவறான விடைக்கு மதிப்பெண் தராமல் தேர்வில் தோல்வி அடையச் செய்யும் ஆசிரியர் போன்று, மனிதன் செய்யும் தவறான செயல்களுக்கு இறைவன் தகுந்த நேரத்தில் தண்டனை வழங்குகிறார்.

27. நாம் செய்த பாவத்திற்கேற்றபடி தண்டனையை இறைவன் கொடுப்பதில்லை. குறைவாகவே கொடுக்கிறார். அதையே தாங்க முடியாமல் துன்பப்படுகிறோம்.

28. ஒருவன் பட்ட கடனை இன்னொருவன் அடைக்க முன்வந்தால் ஏற்றுக் கொள்ளப் படுவதுபோல் ஒருவன் படும் கஷ்டத்தைச் சில சமயங்களில் கன்ம விளைவின் காரணமாக இன்னொருவன் ஏற்றுக் கொள்ள விரும்பினால் கடவுள் அதனை அவனுக்கு மாற்றி முதலாமவனைக் கஷ்டத்திலிருந்து விடுவிக்கிறார்.

(தொடரும்)

***

# திருஞானசம்பந்தர் பாடியருளிய இரண்டாம் திருமுறை

- முனைவர் த. அமிர்தலிங்கம், எம்.ஏ., பிஎச்.டி.

தெய்வச் சேக்கிழார் பெருமான் தாம் பாடியருளியுள்ள பெரிய புராணத்தில் திருஞானசம்பந்த சுவாமிகளையும், திருநாவுக்கரசு சுவாமிகளையும் நம் சைவசமயத்தின் இரு கண்களாகவும், இருபெரும் ஞானக் கடல்களாகவும் உவமித்துக் கூறுகின்றார். திருநாவுக்கரசு சுவாமிகளை சிவபெருமானின் திருவருளாகவும், திருஞானசம்பந்த சுவாமிகளை உமாதேவியின் திருவருளாகவும் போற்றுவார்.

திருஞான சம்பந்தரும், திருநாவுக்கரசரும் ஓரிடத்தில் கூடுவார்கள் ஆனால் இரு பெருங்கடல்கள் ஒன்று கூடுவது போன்றது., சைவசமயத்தின் இரண்டு கண்கள் ஒன்று சேர்வது போன்றது. சிவபெருமானின் திருவருளும், உமாதேவியார் திருவருளும் ஒருங்கு இணைந்தது போன்றது என்று வருணிக்கும் நம் சேக்கிழார் பெருமானின் அற்புதத்திருப்பாடல் பின் வருமாறு :

''அருட்பெருகு தனிக்கடலும் உலகுக் கெல்லாம்
அன்புசெறி கடலுமாம் எனவும், ஓங்கும்
பொருட்சமய முதற்சைவ நெறிதான் பெற்ற
புண்ணியக்கண் இரண்டெனவும், புவனம் உய்ய
இருட்கடு உண்டவர் அருளும் உலகம் எல்லாம்
ஈன்றாள்தன் திருவருளும் எனவும் கூடித்
தெருட்கலை ஞானக் கன்றும் அரசும் சென்று
செஞ்சடை வானவர்கோயில் சேர்ந்தார் அன்றே.''

(திருநாவுக்கரசு சுவாமிகள் புராணம், 185)

இத்தகைய சைவ சமயம் பெற்ற புண்ணியக் கண்கள் ஆகிய திருஞானசம்பந்தரும், திருநாவுக்கரசு சுவாமிகளும் ஒருசேரச் சென்று வழிபாடு செய்த ஒப்பற்ற திருத்தலங்களுள் ஒன்று திருமறைக்காடு திருத்தலம் ஆகும்.

வேதங்கள் வழிபட்டு அருள்பெற்ற இத்திருத்தலத்து இறைவர் வேதவனப் பெருமான் என்றே அழைக்கப்படுகின்றார். வேதவனப் பெருமானை வழிபட்ட வேதங்கள் தாம் வழிபட்டதற்குப் பிறகு திருக்கோயில் திருக் கதவைக் காப்பிட்டுச் சென்றுவிட்ட படியால், அத்திருக்கோயில் திருக்கதவுகள் பிறரால் திறக்கமுடியாமல் இருந்த படியால், பக்தர்கள் வேறொரு வாயிலை உண்டாக்கி அவ்வழியே சென்று இறைவரை வழிபட்டு வந்தார்கள்.

திருஞானசம்பந்தரும், திருநாவுக்கரசரும் வேதங்கள் சென்று இறைவரை வழிபட்ட அத்திருக்கதவம் வழியாகவே சென்று வேதவனப் பெருமானை வழிபடத் திருவுள்ளம் கொண்டார்கள். திருஞானசம்பந்தரும், திருநாவுக்கரசுப் பெருமானை வணங்கி ''அப்பரே! நீரே இவ்வாயில் திருக்காப்பு நீங்குமாறு மெய்ப்பொருள் வண்டமிழ் பாடி அருளும்'' என்று விண்ணப்பித்துக் கொண்டார். அப்பரும்

''பண்ணின் நேர்மொழி யாள்உமை பங்கரே
மண்ணினார் வலஞ்செய்ம் மறைக் காடரே!
கண்ணினால் உமைக் காணக் கதவினைத்
திண்ணமாகத் திறந்தருள் செய்ம்மினே''

என்று தொடங்கிப் பத்துப்பாடல்கள் பாடி முடித்தும் திருக்கதவம் திறக்கவில்லை. ''அரக்கனுக்கு அருள் செய்த எம்பெருமானே! அடியேனுக்கு அருள் செய்யக் கூடாதோ? அடியேன் பால் இரக்கம் காட்டி விரைந்து கதவம் திறந்து அருள் செய்யக் கூடாதோ?'' என்று பதினோராம் பாடலைப் பாடி இறைஞ்சவும், இறைவர் திருக்கதவம் திறந்து அருள்புரிந்தார்.

''அரக்கனை விரலால் அடர்த்திட்ட நீர்
இரக்கம் ஒன்றிலீர் எம்பெரு மானிரே
சுரக்கும் புன்னைகள் சூழ்மறைக் காடரே
சுரக்க இக்கதவம் திறப்பிம் மினே''

என நம் திருநாவுக்கரசு சுவாமிகள் திருக்கடைக் காப்பாகப் பதினோராம் பாடல் பாடி வேண்டிய அளவில்தான் இறைவர் திருக்கதவம் காப்புநீக்கியருளினார் என்பதைச் சேக்கிழார் பெருமான் தெளிவுபடுத்துகின்றார்.

''அப்பரே! வேத வனத் தையர் தம்மை
அபிமுகத்துத் திருவாயில் திறந்து புக்கே
எப்பரிசும் நாம் இறைஞ்ச வேண்டும் நீரே
இவ்வாயில் திருக்காப்பு நீங்கு மாறு

மெய்ப்பொருள் வண்டமிழ்பாடி அருளும் என்ன
விளங்குமொழி வேந்தர்அது மேற்கொண்டு என்னை
இப்பரிசு நீர் அருளிச் செய்தீர் ஆகில்
இதுசெய் வேன் எனப்பதிகம் எடுத்துப் பாட''

(திருஞான சம்பந்தர் புராணம், 581)

''பாடியஅப் பதிகப்பாட் டானபத்தும்
பாடல்நிரம் பியபின்னும் பைம்பொன் வாயிற்
சேடுயர்பொற் கதவுதிருக் காப்பு நீங்காச்
செய்கையினால் வாகீசர் சிந்தை நொந்து
நீருதிருக் கடைக்காப்பில் அரிது வேண்டி
நின்றெடுக்கத் திருக்காப்பு நீக்கம் காட்ட
ஆடியசே வடியார்தம் அடியார் விண்ணோர்
ஆர்ப்பெழுந்தது அகிலாண்டம் அனைத்தும் மூழ்க''

(திருஞானசம்பந்தர் புராணம், 582)

முன்னாளில் வேதங்களால் அடைக்கப்பட்டு அன்றுவரை திறக்கப்படாமல் இருந்த திருக்கதவம் திறந்துகொண்ட பொழுது எழுந்த பக்தர்களின் பக்தி ஆரவாரம் அகில அண்டங்களையும் மூழ்கச் செய்தது என்று கூறிப் போற்றுகின்றார் நம் சேக்கிழார் பெருமான்.

திருக்கதவம் திறக்கப் பாடிய திருநாவுக்கரசு சுவாமிகளைத் திருஞானசம்பந்தர் போற்றுகின்றார். ''நீர் கேட்டுக் கொண்டபடியால்தானே திருக்கதவம் திறக்க யான் பாடினேன்'' என்று திருஞான சம்பந்தரைப் போற்றுகின்றார் திருநாவுக்கரசர். இறைவரின் அற்புதம் இது என இருவரும் அகம் மகிழ்ந்து, திருமறைக்காடரை வேதங்கள் வழிபட்ட நேர்வாயில் வழியே சென்று வழிபடுகிறார்கள்.

திருஞானசம்பந்தரும், திருநாவுக்கரசரும் கொண்ட பக்திப் பரவச நிலையைத் தெய்வச் சேக்கிழார் பெருமான் கீழ்வரும் பாடல்களில் சிறப்புற வர்ணித்திருக்கக் காணுகின்றோம்.

''மற்றது கண்டபோதே வாக்கின்மன் னவரை நோக்கிப்
பொற்புறு புகலி மன்னர் போற்றிட அவரும் போற்றி
அற்புத நிலையி னார்கள் அணிதிரு மறைக்காடாளும்
கொற்றவர் கோயில் வாயில் நேர்வழி குறுகிப் புக்கார்''

''கோயினுட் புகுவார் உச்சி குவித்த செங்கை ளோடும்
தாயினும் இனிய தங்கள் தம்பி ராரைக் கண்டார்
பாயுநீர் அருவி கண்கள் தூங்கிடப் படியின் மீது
மேயின மெய்ய ராகி விதிர்ப்புற்று விரைவின் வீழ்ந்தார்''

''அன்பினுக்கு அளவு காணார் ஆனந்த வெள்ளம் மூழ்கி
என்புநெக்கு உருக நோக்கி இறைஞ்சிநேர் விழுந்து நம்பர்
முன்புநிற் பதுவும் ஆற்றார்; மொழிதடு மாற ஏத்தி
மின்புரை சடையார் தம்மைப் பதிகங்கள் விளம்பிப் போந்தார்''

(திருஞானசம்பந்தர் புராணம் 583, 584, 585)

திருக்கோயில் திருக்கதவம் திறக்கப்பாடியருளிய அப்பரடிகள் திருஞானசம்பந்தப் பெருமானிடம் ''இம் மணிக்கதவம் எப்பொழுதும் திறந்திருத்தல் இயலாது. திறக்கவும் அடைக்கவுமாக இருத்தல்வேண்டும். ஆகவே நீர் அடைக்குமாறு பாடியருளும்'' என்று விண்ணபித்துக் கொள்ள சிவஞானமுண்ட சீர்காழிப் பிள்ளையாரும் இந்தளப் பண்ணில் ''சதுரம் மறைதான்'' எனத் தொடங்கிப் பாடுகின்றார். முதற்பாட்டிலேயே திருக்கதவம் தாளிட்டுக் கொள்ளும் அற்புதத்தை என்னென்று வியப்பது?

திருமறைக் காட்டுத் திருத்தலத்தில் திருக்கதவம் தாளிட்டுக் கொள்ள நம் திருஞானசம்பந்த சுவாமிகள் இந்தளப் பண்ணில் பாடியருளிய அற்புதத் திருப்பதிகம் இது. இரண்டாம் திருமுறைக்கண் அமைந்து விளங்குவது குறிப்பிடத்தக்கது.

''சதுரம் மறைதான் துதிசெய்து வணங்கும்
மதுரம் பொழில்சூழ் மறைக்காட் டுறைமைந்தா
இதுநன் கிறைவைத் தருள் செய்க எனக்குன்
கதவந் திருக்காப் புக்கொள்ளுங் கருத்தாலே''

என்ற அற்புதப் பாடல் பாடியவுடனே இரண்டாகத் திறந்திருந்த கதவுகள் ஒன்றுசேர்ந்து மூடிக்கொண்டு விடுகின்றன.

இதனைச் சேக்கிழார் பெருமானும் வியப்புற்று

..........''சதுரம்'' என்னும்
இன்தமிழ்ப் பதிகப் பாடல் இசைத்திட இரண்டு பாலும்
நின்றஅக் கதவு காப்பு நிரம்பிட அடைத்தது அன்றே''

என்று பாடிப் போற்றுகின்றார். திருமுறைகளைத் தமிழ் வேதம் என்று கொண்டாடுவர் அருளாளர்கள்.

தமிழ் மறையாம் தேவாரத் திருமுறைகளின் அற்புதச்செயலைப் பக்திச்சுவை நனிசொட்டச் சொட்டப் பாடியுள்ள நம் தெய்வச்சேக்கிழார் பெருமானும்

''வேதங்கள் எண்ணில் கோடி
மிடைந்துசெய் பணியைமிக்க
ஏதங்கள் நம்பால் நீப்பார்
இருவருஞ் செய்து வைத்தார்

நாதங்கொள் வடிவாய் நின்ற
நதிபொதி சடையார் செய்ய
பாதங்கள் போற்றும் மேலோர்
பெருமையார் பகரும் நீரார்?''

(திருஞானசம்பந்தர் புராணம் - 591)

என்று திருமுறைகளின் பெருமையையும், திருமுறைகளை நமக்குத் தந்து அருளிய திருஞானசம்பந்தர், திருநாவுக்கரசரையும் ஒருங்குவைத்துப் போற்றியிருத்தலை இப்பாடலால் நாம் நன்கு உணருகின்றோம்.

அன்று முதல் வேதங்கள் வழிபட்ட வாயில் வழியே மக்களும் சென்று வழிபடும் வண்ணம் திருமறைக்காட்டுத் திருக்கோயில் திருக்கதவம் திறக்கவும், அடைக்கவும் வழிகண்டது என்றால் திருமுறைகளை வணங்கி வாழ்தல் வையத்தார் கடமை என்பதையும் நம் தெய்வச் சேக்கிழார் பெருமான்.

''அத்திரு வாயில் தன்னில் அற்றைநாள்
தொடங்கி நேரே
மெய்த்திரு மறைகள் போல மேதினி புக்குப் போற்ற
வைத்தெதிர் வழக்கம் செய்த வரம்பிலாப்
பெருமை யோரைக்
கைத்தலங் குவித்துத் தாழ்ந்து வாழ்ந்தது
கடல்சூழ் வையம்''

(திருஞானசம்பந்தர் புராணம் - 589)

என்று கொண்டாடியிருத்தல் காணுகின்றோம்.

இரண்டாம் திருமுறைக்கண் இந்தளப்பண்ணில் அமைந்து விளங்கும் ''சதுரம் மறைதான்'' எனத் தொடங்கும் இத்திருப்பதிகம் பாடினால் உலகோர் புகழும் புகழினை எளிதினில் பெற்று, நாம் எண்ணிய காரியங்கள் யாவும் விரைந்து முடிந்து, வீடுபேறும் பெற்றுச் சிறக்கலாம் எனத் திருக்கடைக் காப்பினில் பதிகப்பயன் கூறியுள்ளார் நம் ஆண்டகைப் பிள்ளையார்.

''காழிந் நகரான் கலைஞான சம்பந்தன்
வாழிம் மறைக்கா டனை வாய்ந்தறி வித்த
ஏழின் னிசைமாலை ஈரைந் திவைவல்லார்
வாழி உலகோர் தொழவான நாடுஅடைவாரே''

திருச்சிற்றம்பலம்



நம் திருஞானசம்பந்தர்தம் திருஅவதார நோக்கம் பரசயம் நிராகரித்து நீறாக்குதலே ஆகும்.

''அவம்பெருக்கும் புல்லறிவின் அமண்முதலாம்
பரசமயப்
பவம்பெருக்கும் புரைநெறிகள் பாழ்படநல்
ஊழிதொறும்
தவம்பெருக்கும் சண்பையிலே தாவில்
சரா சரங்கள் எலாம்
சிவம் பெருக்கும் பிள்ளையார் திருஅவதாரம்
செய்தார்''

என்று அவதார நோக்கம் கூறியருளியுள்ள நம் தெய்வச் சேக்கிழார் பெருமான் திருஞானசம்பந்தரின் அவதார நோக்கம் நிறைவேறுதற்கான அழைப்பு, திருஞானசம்பந்தர் திருமறைக் காட்டில் எழுந்தருளியிருந்த போதுதான் வந்துற்றது என்பதையும்

''.... ஏழுலகு உய்ய வந்த
மன்னிய புகலி வேந்தர் வைதிக வாய்மைச் சைவச்
செந்நெறி விளக்குகின்றார் திருமறைக் காடு சேர்ந்த
நன்னிலை கன்னி நாட்டு நலவினைப் பயத்தார்
கேட்டார்''

(திருஞானசம்பந்தர் புராணம் - 605)

என்று கூறியிருத்தல் இங்கு உணர்ந்து மகிழத்தக்கது.

(தொடரும்)

★ ★ ★

# காலம் வரும் வரை காத்திரு!

- கலைமாமணி மா. லட்சுமணன்

(நீதிக்கதை)

பொதுவாகவே கதை கேட்பதில் ஆர்வமுள்ளவர்கள் - நீதிக்கதைகள் என்றால் விட்டு விடுவார்களா? நீதியைப் புகுத்தி கதை சொல்வதிலே திருமுருக கிருபானந்தவாரியார் அவர்கள் மகா வல்லுநர் - ஆன்மீகச் செம்மல், தமிழ்க்கடல் ; அவராற்றிய சொற்பொழிவுகள் ஆயிரமாயிரம் - ஆன்மீகத்திருப்பணிகளும் அது போலவே! எத்தனையோ நீதிக் கதைகளை அவர் கூறக் கேட்டிருக்கிறேன். எல்லாமே வாழ்க்கைக்குப் பயன் தரக் கூடியவை. பல ஆயிரம் பாடல்கள் அவருக்கு மனப்பாடமாக இருந்தன். கம்பஇராமாயணமா? வில்லிபுத்தூரின் பாரதமா? அருணகிரியார் திருப்புகழா? மீனாட்சி திருக்கல்யாணமா? இப்படி எல்லாமே மண்டிக்கிடக்கும். தமிழ் பொக்கிஷம் வாரியார் சுவாமிகளின் நீண்ட நெடுங்கதைகளுக்கிடையே உபமான உபமேயங்களுடன் பல குட்டிக்கதைகள் நீதிநெறிகளைத் தாங்கி வரும் கதைகளானதால் மனதிலே ஆழப் பதிந்து விடும் தன்மை மிக்கவை.

அந்தப் பெருமகனார் கூறிய ஒன்றிரண்டு கதைகளை இங்கே கூறுகிறேன்.

புதிதாகக் கட்டிடம் கட்டும் வேலை நடந்து கொண்டிருந்தது. கட்டிடத்தின் சொந்தக்காரர் குடை ஒன்றை விரித்துப் பிடித்தபடி நின்றுகொண்டிருந்தார் - அப்போது அங்கே வந்த அவரது நண்பர் கட்டிட வேலைதான் நடந்து கொண்டிருக்கிறதே! நீங்கள் ஏன் அருகிலே நின்றுகொண்டிருக்கிறீர்கள்? என்று கேட்டார்!

அதற்கு அந்த வீட்டின் சொந்தக்காரர் அமைதியாகப் பதில் கூறினார் - ''நான் நின்றால் இந்த வேலை நடக்கும். நான் நடந்தால் இந்த வேலை நிற்கும்.'' என்றாராம். நகைச்சுவையுடன் கூறுவதில் வாரியாருக்கு நிகர் வாரியாரே!

ஒரு விஷயத்தை குறிப்பாக உணர்த்துவதற்கு ஒரு உபமானம் சொல்வார். ஒரு முழ நீளப்பலகையில் திருச்சி என எழுதப்பட்டு அவ்வூரின் திசை காட்டும் - சிறிதாகத்தான் அந்தப் பலகை இருக்கும், திருச்சி வரையா நீட்டுவான்? என்பார் - பொறுமையுடன் செயலாற்றும் பெரியவர்களின் சிறப்பான குணத்தைப் பற்றி விளக்க வந்த வாரியார் சுவாமிகள் யானைக் கதை ஒன்றை கூறினார்.

கோயில் யானை ஒன்றை - அதனுடைய பாகன் அழைத்துப்போய் ஆற்றிலே குளிக்கவைத்து - அதற்கு நாமமிட்டு வீதி உலாவில் கலந்து கொள்ள அழைத்து வந்தான்.

சுவாமியும் நன்கு அலங்கரிக்கப்பட்டு - வீதி உலா புறப்பட யானையின் வருகைக்காகக் காத்திருந்தது.

ஒரு குறுகிய பாலத்தின் வழியே யானை வந்து கொண்டிருந்தது - திடீரென யானை நின்றுவிட்டது. அதே பாலத்தின் எதிர்த் திசையிலிருந்து ஒரு பன்றி வந்துகொண்டிருந்தது. அசிங்கத்தில் புரண்டு எழுந்திருந்ததால் பார்க்கவே அருவருப்பாக இருந்தது - துர் நாற்றம் - எங்கே தன்மீது உரசிவிடுமோ என்ற அச்சத்தில் யானை ஒதுங்கி ஒடுங்கி நின்றது. பன்றி கர்வத்துடன் அந்த யானையைப் பார்த்து - ''இந்த அச்சம் எப்போதும் உனக்கிருக்க வேண்டும். தெரிந்ததா?'' எனக் கேட்டது. இதற்கு மறுமொழி ஏதும் கூறாமல் யானை சம்மதித்தது. தலையசைத்தது.

யானையைக் கடக்கும்போது சற்று உரசுவது போன்ற பாவனை, யானை நடுங்கியது - பன்றி சற்று சிலிர்த்தால் கூட போதும். யானை மீண்டும் குளிக்க வேண்டி வந்து விடும் - யானைப் பாகனும் செய்வதறியாது மிரண்டு போய்தான் நின்றான் - பன்றி ஒரு விதமாகப் போய்த் தொலைந்தது - யானையும் சுவாமி புறப்பாட்டில் கலந்து சிறப்பித்தது. மறு நாள் காலையில் குளிப்பதற்காக அதே பாலத்தில் ஆற்றை நோக்கிப் போய்க் கொண்டிருந்தது கோயில் யானை. அதே பன்றி எதிர்ப்பட்டது - யானை ஒதுங்கவில்லை, வழியை அடைத்துக் கொண்டு நின்றது.

பன்றி பார்த்தது - என்ன யானையாரே? நேற்றைய அச்சம் நீங்கிவிட்டதா? எனக் கேட்டது. ''அச்சப்பட வேண்டிய அவசியம் இப்போதைக்கு

## அருளாளர் யார் எனக் கண்டுபிடியுங்கள்

**அருளாளர் ஒருவரின் அரிய மணிமொழிகள் கீழே தரப்பட்டுள்ளன. அம்மணிமொழிகளை நவின்ற மகான் யார் எனக் கண்டுபிடியுங்கள். கண்டு பிடிக்க முடியாதவர்கள் அந்த அருளாளர் யார் என்பதை 32ஆம் பக்கம் பார்த்துத் தெரிந்து கொள்ளுங்கள்.**

1. ''ஆக்கை எனும்
இடிகரையை
மெய் என்ற
பாவி நான்''

2. ''இறப் பொடு
பிறப்பை உள்ளே
எண்ணினால்
நெஞ்சது பகீரெனும்; துயில்உறாது''

3. ''நான் கும்பிடும்போது
அரைக் கும்பிடு; ஆதலால் நான்
பூஜை செய்யல் முறையோ?''

4. ''எண்ணரிய பிறவிதனில்
மானிடப் பிறவிதான்
யாதினும் அரிது அரிது காண்.

இப்பிறவி தப்பினால்
எப்பிறவி வாய்க்குமோ?
ஏது வருமோ அறிகிலேன்''

5. ''கல்லாத பேர்களே
நல்லவர்கள் நல்லவர்கள்,
கற்றும் அறிவு இல்லாத என்
கர்மத்தை என் சொல்கேன்?''

6. ''இரும்புநேர் நெஞ்சகக் கள்வன்;
ஆனாலும் உனை இடைவிட்டு நின்றது
உண்டோ?''

7. ''அவன் அன்றி ஓர் அணுவும்
அசையாது எனும் பெரிய
ஆப்தர்மொழி ஒன்று கண்டால்
அறிவு ஆவது ஏது? சில
அறியாமை ஏது? இவை
அறிந்தார்கள் அறியார்கள் ஆர்?''

8. ''இன்றைக்கு இருந்தாரை
நாளைக்கு இருப்பர் என்று
எண்ணவோ திடம் இல்லையே!''

9. ''வாயார உண்டபேர் வாழ்த்துவதும்,
நொந்தபேர் வைவதுவும்
எங்கள் உலக வாய்பாடு''

10. துள்ளுமறியாம் மனது
பலிகொடுத்தேன், கர்ம
துஷ்ட தேவதைகள் இல்லை
துரியநிறை சாந்த தேவதையாம் உனக்கே
தொழும்பன் அன்பு அபிஷேகநீர்.

11. ''சாட்டையில் பம்பர ஜாலம்போல் எலாம்
ஆட்டுவான் இறை''

இல்லை. அருகில் வா விளக்குகிறேன்'' எனறது யானை.

அருகே வந்தது - துதிக்கையால் பன்றியை ஒரு வளை வளைத்து காலடியில் போட்டு மிதித்தது. யானை பன்றியின் உருவம் சிதைந்து கூழாகி விட்டது - இருந்தாலும் உயிர் ஒட்டிக் கொண டிருந்தது. யானை கூறியது.

''பன்றியாரே! நேற்றைய நிலையில் நான் பலவீனன் - இன்றைக்கு நான் பலசாலி - உன்னோடு நேற்று நான் மோதினால் வீணாக கால தாமதம் ஏற்பட்டு திருவீதி உலா தடைபட்டிருக்கும். இன்றைக்கு பிரச்னை ஏதுமில்லை - குளிப்பதற்காகப் போகிறேன் - அசுத்தப்பட்டாலும் குளித்துக் கொள்ள லாம். ஒன்றை மட்டும் நீயும் இந்த உலகமும் தெரிந்து கொள்ள வேண்டும். பெரியவர்கள் அவசரப்படாமல் காலத்துக்காகக் காத்திருப்பார்கள் - பணிந்து போவதால் அவர்களைத் தப்பாக எடைபோடக் கூடாது - காலம் வரும்போது அவர்கள் தங்களை பலசாலிகள் என் பதை நிருபித்து விடுவார்கள்.'' என்று கூறி மிடுக் கோடு பன்றயைக் கடந்து சென்றது கோயில் யானை.

***

# வழிபாட்டில் தேன்

- டாக்டர் டி. செல்வராஜ்

''தேனுமுடன் கலந்தது;
இது தித்திக்கும்''

**திருவமுது :** காளத்தி வேடரான திருக் கண்ணப்ப நாயனார், நெருப்பில் பல வகை இறைச்சி களைச் சுட்டுப்பக்குவப்படுத்தினார். சில துண்டு களை வாயிலிட்டு, பற்களால் மென்று சுவைத்தார். அவற்றின் சுவையில் குறை இருந்ததோ என்னவோ! உடனே, அவற்றுடன் சிறிதளவு தேனையும் கலந் தார். ஊனும், தேனும் கலந்த திருவமுதை ஒரு கல்லை யில் தொகுத்தார். மலையேறினார். திருவமுதைக் குடுமித்தேவரின் திருமுன் படைத்தார்.

''ஊனும், தேனும் கலந்த இத்திருவமுது சுவை மிக்கது. இதில் இனிப்பான தேனும் கலந்திருப்பதால் இது தித்திக்கும். ஏற்றருளுங்கள்'' என மொழிந்தார்; (திருக்கண்ணப்ப நாயனார் புராணம், பாடல் 150) வில்லம்புடன் ஒதுங்கி நின்று காவல் புரிந்தார்.

இவ்வாறே நாயனார் குடுமித்தேவரை வழி பட்டு ஆறே நாள்களில், பதினாறு வயதில் முத்தியும் பெற்றார்.

**காணிக்கை :** கங்கை வேடரான குகப் பெருமானோ இராமர் திருவமுது செய்வதற்குத் தகுந்தபடி மீனையும், தேனையும் பக்குவப்படுத்தித் திருத்திக் கொண்டுவந்து அவருக்குக் காணிக்கை யாகச் செலுத்தினார். இதனால் இராமரின் உயிர்த் தோழராய், உடன்பிறப்பாய் மேன்மேலும் உயர்ந்தார்.

இருபெரும் வேடர்கள் கொணர்ந்த திருவமுது களில் தேன் ஒரு தனிச் சிறப்பிடத்தைப் பெறுகிறது. மலையுச்சியில் கிடைக்கின்ற தேன் அவர்கள் கொண்ட அன்பின் - பக்தியின் உச்சநிலையைச் சுட்டுகிறது.

**காணிக்கை :** குறவர்கள் சேரன் செங்குட்டு வனைக் காண வந்த போது, மலைபடு பொருள்கள் பலவற்றைக் காணிக்கைப் பொருள்களாக ஏந்தி வந்தனர். அப்போது அவர்கள் தேன் குடங்கள் சிலவற்றைக் கொண்டு வந்தனர்.

**நான்கும் மூன்றும் :** அவ்வையார், பாலும், தெளிந்த தேனும், பாகும் பருப்பும் என்ற சுவையான இவை நான்கையும் கலந்து போசனப்பிரியரான விநாயக ருக்குத் தருவதாக ஆசை காட்டுகின்றார்.

பரிவர்த்தனையாக விநாயகர் சங்கத்தமிழ் மூன்றை மட்டும் அருளினாலே போதும் என்று பாடுகிறார்.

பாலும் தெளிதேனும் பாகும் பருப்புமிவை
நாலும் கலந்துனக்கு நான்தருவேன் - கோலஞ்செய்
துங்கக் கரிமுகத்துத் தூமணியே நீயெனக்குச்
சங்கத் தமிழ்மூன்றும் தா''

தேனுடன் கலந்தவை தித்திக்கும். இச்சுவை யில் ''யானை''யும் மயங்கி அருளும்.

காணிக்கைப் பொருள்கள் இறை வழிபாட்டுப் பொருள்களுக்கு இணையானவை. எனவே, தேன் சிறந்த காணிக்கைப் பொருளாகவும், இறை வழி பாட்டுப் பொருளாகவும் திகழ்கின்றது என்பது மேற்கண்டவற்றால் நன்கு புலனாகின்றது.

## இறைவழிபாட்டில் தேனடைகள்

சில கோயில்களில் தேனடைகள் இருக்கின்றன. இவை கோயில்களில் இருப்பதாலும், பல நூற்றாண்டு களாக வழிவழி நிலைத்து இருப்பதாலும் புனித மானவை. எனவே, இவற்றையும் பக்தர்கள் வழி படுகின்றனர்.

### 1. புள்ளமங்கை (ஆலந்துறை) (சோழநாடு)

புள்ளமங்கை பசுபதி இரயில் நிலையத்தி லிருந்து வடமேற்கே மூன்று கி.மீ. தூரத்தில் உள்ளது. கோயிலின் வடபுறத்தே அமைந்ததேனடையைத் தரிசித்து வழிபடலாம்.

### 2. திருச்சிற்றேமம் (திருச்சிற்றாய்மூர்) (சோழநாடு)

திருச்சிற்றேமம் ஆலத்தம்பாடி இரயில் நிலையத்திலிருந்து ஒன்பது கி.மீ. தொலைவில் இருக்கிறது. இங்கே சுவாமி சன்னிதியின் தென்பக்கத் தில் தேனடை உள்ளது. சித்தர்கள் தேனீக்களாக உரு வெடுத்து வந்து சுவாமியை வழிபடுவதாக ஐதிகம். இத்தேனடைக்கும் பூசைகள் நடைபெறுகின்றன.

# இறைவனே ஆனந்தத் தேன்

தினைத்தனை உள்ளதோர்
பூவினில் தேன் உண்ணாதே
நினைத்தொறுங் காண்தொறும்
பேசுந்தொறும் எப்போதும்
அனைத்தெலும் புள்நெக
ஆனந்தத் தேன் சொரியுங்
குனிப்புடை யானுக்கே
சென்றூதாய்
கோத்தும்பீ

– திருவாசகம்

### வழிபாட்டில் தேனீக்கள்

கழுகு, யானை, பாம்பு, குரங்கு முதலிய உயிரினங்கள் பக்தி உணர்வுகள் மிக்கவை. இவையும் இறைவனை வழிபடுகின்றன. இவை போல தேனீக்கள் வழிபடுகின்ற இருதலங்கள் இங்குக் குறிக்கத்தக்கன.

**1. ஈங்கோய் மலை :** (சோழ நாடு) இத்தலம் குழித்தலையிலிருந்து மூன்று கி.மீ. தூரத்தில் உள்ளது. இங்கே அகத்திய முனிவர் தேனீயாக உருவெடுத்து இறைவனை வழிபடுகின்றாராம். தேனீ வழிபடுகின்ற திருத்தலத்திற்கு 'ஈங்கோய் மலை' என்ற பெயர் அமைந்தது.

**2. நன்னிலம் :** (மதுவனம்) (சோழநாடு) இங்கே விருத்திராசுரன் தந்த தொல்லைகளைத் தாங்காமல் தேவர்கள் தேனீக்களாக மாறி இறைவனை வழிபட்டதால் இத்தலத்திற்கு 'மதுவனம்' என்ற பெயரும் அமைந்தது. இறைவன் : மதுவன நாதர்.

இறைவி : மதுவன நாயகி. மது = தேன்.

### தேன் எடுத்தல்

சுத்தமான தேன் கிடைப்பது கடினம். மலைத்தேன் கிடைப்பது அதைவிடக் கடினம். பன்னிரண்டு ஆண்டுகளுக்கு ஒரு முறை மலர்கின்ற குறிஞ்சிமலர்த்தேன் கிடைப்பது மிக மிகக் கடினமாம்.

குறவர் தேனெடுக்கும் தொழிலைச் செய்கின்றனர். அவர்கள் தேனடைகளுக்கு அருகில் தீப்பந்தங்களை ஏந்தித் தேனீக்களை விரட்டி, தேனடைகளிலிருந்து தேனைப் பிரித்தெடுக்கின்றனர்.

அவ்வையார்,

''ஈயார் தேட்டைத் தீயார் கொள்வர்''

என்று கொன்றை வேந்தனில் (பாடல் 4) தேனெடுக்கும் முறையை நுட்பமாகச் சுட்டினார்.

### பொருள் 1

ஈயார் - தேனீக்கள்

தேட்டை - தேடித்தேடி, துளித்துளியாகச் சேமித்த தேனை, (தேடு + ஐ = தேட்டை) (சேமிப்பை)

தீயார் - கைகளில் தீப்பந்தங்களை ஏந்தியவர்கள்

கொள்வர் - முழுவதும் எடுத்துக் கொள்வார்கள்.

இதிலிருந்து ஓர் உண்மை புலப்படுகிறது. அது வருமாறு :

**பொருள் 2.**

ஈயார் - தம்மிடம் பல செல்வங்கள் இருந்தும் மற்றவர்களுக்குக் கொடுக்காத உலோபிகள் சேமித்த செல்வங்களை

தீயார் - தீய திருடர்கள்

கொள்வர் - முழுவதும் எடுத்துக் கொள்வார்கள்.

தேனைத் தேனீக்கள் சேமிப்பதும், மற்றவர்கள் சேகரிப்பதும் அருமையான செயல்களாம். இது அரிய பொருள் என்பதால் வழிபாட்டிற்கு உரிய பொருள் என்று தெரிவு செய்யப்பட்டுள்ளது.

## வழிபாட்டில் தேன்

மங்கலமானவை ; மரியாதைக் குரியவை ; அழகானவை; அருமையானவை; எளிதில் கிடைப்பவை; எப்போதும் கிடைப்பவை; எல்லாருக்கும் கிடைப்பவை; இனிமையானவை; சுவையானவை; பல வண்ணங்கள் நிறைந்தவை; நல்ல மணமுடையவை; சிறந்த மருத்துவக் குணமுடையவை; செல்வ மதிப்பு மிக்கவை முதலியவை இறை வழிபாட்டுப் பொருள்களாகத் தேர்ந்தெடுக்கப்படுகின்றன.

தேன் தனக்கேயுரிய இனிமையான சுவையுடையது; அருமையானது; சத்துமிக்க மருந்தாகவும் உள்ளது. ஆகவே, இது இறை வழிபாட்டிற்குப் பொருத்தமான பொருளாம்.

திருவமுது படையலுக்கும், அபிடேகத்திற்கும் ஏற்றது தேன்.

குறிப்பாக, முருகனை வழிபடுகின்றபோது தேனையும், தினைமாவையும் படைப்பது வழக்கம். மேலும், பல தெய்வ வழிபாடுகளிலும் தேனுக்கு ஒரு சிறப்பிடம் உண்டு. அபிடேகத்திற்குத் தேன் நிச்சயம் தேவைப்படுகிறது.

## அபிடேகத்தில் தேன்

இறைவனுக்கு அபிடேகம் செய்கின்ற போது இத்தனை பொருள்களை, இந்த வரிசை முறைப்படி பயன்படுத்தி அபிடேகம் செய்ய வேண்டும் என்பதற்குச் சில வரன்முறைகள் இருக்கின்றன.

திருமேனிக்கு ஒவ்வொரு பொருளால் அபிடேகம் செய்கின்ற போது, அத்திருமேனி வெவ்வேறுபட்ட தோற்றப் பொலிவுகளுடனும் வண்ணக் கோலங்களுடனும் திருக்காட்சி தருவது தரிசிக்கத் தக்கது.

திருமேனிக்குத் தேனபிடேகம் நடைபெறுகின்றபோது, அத்தேன் விரைந்து வழிந்தோடாமல், திருமேனியில் படிந்து, படர்ந்து வழிவது தெய்விகக் கவர்ச்சியாகத் திகழ்கின்றது. தேனபிடேகத்தின்போது சில திருத்தலங்களில் சில அதிசயங்களும் நிகழ்கின்றன. இரண்டு எடுத்துக்காட்டுகள் வருமாறு :-

### 1. திருப்புறம்பயம் (சோழநாடு)

கும்பகோணத்திலிருந்து ஆறு கி.மீ. தூரத்தில் இருப்பது திருப்புறம்பயம். இங்குள்ள விநாயகரின் திருமேனி கடல்பஞ்சு, சங்கு, கிளிஞ்சல்களால் ஆனது. இம்முறையில் அமைந்த ஒரே திருமேனி இது. இத்திருமேனிக்கு விநாயகர் சதுர்த்தியன்று தேனபிடேகம் செய்கின்றனர். அபிடேகத் தேன் முழுவதையும் இத்திருமேனி உறிஞ்சிக்கொள்கிறது. எனவே, இவரைத் ''தேன் உறிஞ்சு விநாயகர்'' என்பர்.

### 2. ரிக்ஷி வந்தியம்

தென்னாற்காடு மாவட்டம், கள்ளக்குறிச்சியிலிருந்து திருக்கோவிலூருக்குச் செல்கின்ற பாதையில் ரிக்ஷி வந்தியம் என்ற திருத்தலம் இருக்கிறது. இங்குள்ள அர்த்த நாரீசுவரர் கோயிலின் மூல லிங்கம் மற்ற லிங்கங்களைப்போலவே இயல்பான தோற்றமுடையது. தினமும் அர்த்த யாமப்பூசையின் போது லிங்கத்திற்குத் தேனபிடேகம் நடைபெறுகிறது. அப்போது லிங்கத்தின் பாணப்பகுதியில் அம்மனின் திருவுருவம் மெல்லப்பிரசன்னமாகி தேன் வழிந்ததும் மெல்ல மறைகின்றது. சிவத்துள் பரிபூரணமாய் நிறைந்துள்ள சக்தி தேவைப்படுகின்ற போது தானே வெளிப்பட்டுத் தோன்றும்; செயல் முடிக்கும்; மறையும்.

## பஞ்சாமிர்தத்தில் தேன்

அமிர்தம் போன்று இனிப்புச் சுவை நிறைந்த அருமையான ஐந்து பொருள்களின் கலவை பஞ்சாமிர்தம். இதிலுள்ள ஐந்து பொருள்கள் எவை என்பது தெளிவாகத் தெரியவில்லை. இருப்பினும் இப்போது பஞ்சாமிர்தம் செய்யப்பயன்படுகின்ற பொருள்கள் வருமாறு :-

1. 1. தேன் 2. வாழைப்பழம் 3. பால் 4. நெய் 5. சர்க்கரை அல்லது கருப்பஞ்சாறு அல்லது தேங்காய்த் துருவல்.

2. 1. தேன் 2. வாழைப்பழம் 3. நெய் 4. சர்க்கரை 5. திராட்சைச் சாறு.

புகழ்பெற்ற பழனி பஞ்சாமிர்தத்தில் கலந்துள்ள பொருள்கள் இவை:

1. தேன் 2. மலைவாழைப்பழம் 3. பால் 4. நாட்டுச் சர்க்கரை 5. பேரீச்சம்பழம்.

தேன் கலவாத பஞ்சாமிர்தங்களும் இருக்கின்றன. ஆனாலும், தேனுடன் கலந்த பஞ்சாமிர்தங்களே மேன்மையானவை.

காரணம், முக்கியமாகத் தேன் தானும் கெடாது; தனக்குள் ஊறிய பொருள்களையும் கெடுக்காது. எனவே, தேன் கலந்த பஞ்சாமிர்தம் நெடுநாள் கெடாமல் இருக்கும். தேன் தமிழர் கண்டறிந்த உணவு பாதுகாப்புச் சாதனம். (Preservative)

மற்றும், தேன் மற்றப் பொருள்கள் நான்கும் நன்கு குழைவதற்குத் துணை செய்கிறது. இனிப்புச் சுவையைச் சீராகப் போற்றுகிறது.

பஞ்சாமிர்தத்தின் பழுப்பு நிறத்துடன் தேனின் நிறமும் ஒத்திருப்பது ஒரு கூடுதலான சிறப்பு எனலாம்.

சிவபெருமான் அபிடேகப் பிரியன். சிவன் கோயில்களில், சிவராத்திரியன்று, இரவில் நான்கு காலப்பூசைகள் நடைபெறுகின்றன. அப்போது பயன்படுகின்ற அபிடேகப் பொருள்களைக் காணலாம்.

| காலம் | - | அபிடேகப் பொருள் |
|---|---|---|
| 1. முதற் காலம் | - | பஞ்சகவ்வியம் |
| 2. இரண்டாம் காலம் | - | பஞ்சாமிர்தம் |
| 3. மூன்றாம் காலம் | - | தேன் |
| 4. நான்காம் காலம் | - | கருப்பஞ்சாறு. |

தேன் தனித்தும், பஞ்சாமிர்தத்தில் கலந்தும் சிறந்த அபிடேகப் பொருளாகத் திகழ்கின்றது.

சிவபெருமான் பஞ்ச கவ்வியப் பிரியன்; முருகன் பஞ்சாமிர்தப்பிரியன், பொதுவாக, எல்லாத் தெய்வங்களுக்கும் உகந்தது தேன். தேனுக்கு மாற்றாகக் கருப்பஞ்சாற்றையோ வெல்லப்பாகையோ பயன்படுத்தலாம்.

**பெயர்களில் தேன்**

தேன் - மது என்ற பெயரைச் சார்ந்த மதுவனம், மதுவன நாதர், மதுவன நாயகி என்ற பெயர்கள் முன்னர்க்குறிக்கப்பெற்றன.

'தேனப்பன்' என்ற இறைவனது பெயரை மக்கள் சூடிக்கொள்கின்றனர்.

திருஞான சம்பந்த சுவாமிகள், உமையம்மையை,

1. ''தேன்மொழிப் பாவை'' - என்றும் (திருக்கோட்டூர்ப்பதிகம், பாடல் 11)

2. ''தேனமரும் மொழி மாது'' - என்றும் (திருப்பாண்டிக்கொடுமுடிப்பதிகம், பாடல் 7)

3. ''தேனிற்பொலி மொழியாள்'' என்றும் (திருக்கொடுங்குன்றப்பதிகம், பாடல் 1)

புனைந்துரைக்கின்றார். ''தேன்மொழி'' என்ற பெயர் மகளிருக்கு உரியது.

திருக்குற்றாலத்திலுள்ள ஓர் அருவிக்குத் ''தேனருவி'' என்பது பெயர். ''தேன்கனிக்கோட்டை'' என்பது ஒரு பேரூரின் பெயராம்.

தேனைச் சார்ந்து வரும் இத்தகைய பெயர்கள் அதன் பெருமைகளை மேன்மேலும் உயர்த்துகின்றன.

**இறைவனே தேன்**

இறைவன் சச்சிதானந்தனம். சத்தியமாய், ஞானமாய், ஆனந்தமாய்ப் பொலிகின்றான். மேலும், அவன் இனிமையானவன். அவன் ''கரும்பை, தேனை, பாலை, கனி, அமுதை, கண்டை, கட்டியை ஒத்திருப்பான்'' (கண்டு = கற்கண்டு; கட்டி = வெல்லக் கட்டி) என்று ஓர் அடியார் மிக இனிமையான பொருள்கள் அனைத்தையும் வரிசைப்படுத்தி அவற்றை ஒத்திருக்கின்றான் இறைவன் என்று தொகுத்து முடித்தார்.

மாணிக்கவாசக சுவாமிகள், தேனுக்கு முதலிடம் அளித்து,

1. களிதரு தேனே! கடலமுதே! கரும்பே!
2. தேனே! அமுதே! கரும்பின் தெளிவே! சிவனே!
3. தேனாய், அமுதமுமாய், தீங்கரும்பின் கட்டியாய்''

(திருவாசகம் (1) 374 (2) 59 (3) 190) என்று இறைவனைத் தேனென்றும், அமுதமென்றும், கரும்பென்றும் பாடிப்பாடிப்பாடி மிகப் பரவசமடைகின்றார்.

இறைவன் தெவிட்டாத தேன்; ஞானத்தைத் தெளிவிக்கும் தேன். கண்களாகிய கரு வண்டுகளும், மனமாகிய பல வண்ண வண்டும், உயிராகிய பொன் வண்டும் அத்தேனைச் சுவைத்தும், பருகியும், அனுபவித்தும் பேரின்பத்தில் திளைக்க வேண்டும்.

***

# திருப்புகழை பாடக் கேட்டவர்

**- திருப்புகழ் மாமணி மு. அருணகிரி**

கொங்கு நாட்டின் கண், பவானிமுக்கூடல் எனும் சிவஸ்தலத்துக்கு அருகில், ''பூநாச்சி'' என்ற கிராமத்தில், சிதம்பர ஜோஸ்யருக்கும், இலட்சுமி அம்மாளுக்கும், 21.11.1870-ல் அர்த்தநாரி என்பவர் பிறந்தார். இவர்தான் பிற்காலத்தில் வள்ளிமலை திருப்புகழ் சுவாமிகள் என அழைக்கப்பட்டவர் ஆவார். இளமையிலிருந்தே படிப்பில் நாட்டமில்லாது, வாழ்ந்து வரும் காலத்தில், பெற்றோர்கள் திருமணத்தை இளமையிலேயே செய்துவிட்டனர். தனது முதல் மனைவியும், குழந்தைகளும் இறந்து போகவே, வாழ்க்கையில் ஒரு வெறுப்பும் துக்கமும் உண்டாகி, மேலும் குன்மநோய் பீடிக்கப்பட்டு, பலவைத்தியங்கள் செய்தும் குணமடையாது போகவே, கொத்தனார் ஒருவர், இவரை பழநிக்கு சென்று, அபிஷேக தீர்த்தத்தை 1 மண்டலம் சாப்பிட்டு வந்தால் குணமடையும் எனக் கூறியதைக் கேட்டு, பழநிக்குச் சென்று, திருமஞ்சனம் நீர் சுவாமிக்குக் கொண்டு வந்தும், அபிஷேக தீர்த்தத்தை உட்கொண்டும் வரும் காலத்தில், நோய் சிறிது குணமடைந்ததை அறிந்தார்.

அத்தருணத்தில் பழநியில் முருகன் பவனி வரும் போது, மதுரை தேவதாசி ஒருத்தி, ''வங்கார மார்பிலணி'' எனத் தொடங்கும் திருப்புகழில், பின் பாதியில் வரும் அடிகளான

''சிங்கார ரூபமயில் வாகன நமோநமென
கந்தா குமார சிவதேசிக நமோநமென
சிந்தூர பார்வதி சுதாகர நமோநமென - விரு தோதை
சிந்தான சோதிகதிர் வேலவ நமோமென
கங்காள வேலிகுருவானவ நமோநமென
திண் சூரராழிமலை தூள் படவை வேலைவிடு -
முருகோனே!!

என வரும்பகுதியை அலசி அலசி பாடி வந்ததைக் கேட்ட அர்த்தநாரிக்கு அப்பாடலால் மனம் ஈர்க்கப் பட்டு, கண்ணீர் மல்கி மெய்ம்மறந்து அனுபவித்தார். 1908-1912 வரை பழநியில் இருந்த காலத்தில் இறைவன் கருணையினால், தேவதாசியால் பாடின அப்பாடலே தான் அன்று முதல் திருப்புகழைக் கற்கத் தூண்டியது. அது சமயத்தில் திருப்புகழ் பாடல்கள் அடங்கிய புத்தகம், தணிகை மணி, வ.சு. செங்கல்வராய பிள்ளை அவர்களிடம் கிடைக்கும் என்பதை அறிந்து, புத்தகத்தை வாங்கிப் பிறர் உதவியால் படிக்கலானார். வாழ்க்கையில் நாட்டமில்லாது வாழ்ந்ததாலும், தன் வாழ்நாளில் பெரும் பகுதியை மைசூர் சமஸ்தானத்தில் பணி செய்த போது கன்னடம் மட்டும் பேச தெரிந்ததாலும், தமிழில் படிக்க முடியாமல் போயிற்று. தேவதாசியினால் பாடப்பட்ட திருப்புகழ் பாடலினால் ஈர்க்கப்பட்டது பழநியாண்டவரது கருணைபோலும். தமிழைச் சிறிதும் படிக்க தெரியாத அர்த்த நாரிக்கு, அப்பாடல் மனத்தால் ஈர்க்கப்பட்டது அதிசயமே ஆகும். ''அதிசயம் அனேகமுற்ற பழநி மலை மீதுதித்த அழக'' என அருணகிரியாரால் புகழப்பட்ட தலமாகையால், இறைவன், உலகில் இவரை திருப்புகழ் பரப்பவேதோற்றுவித்தான் போலும் என நினைக்கத் தோன்றுகிறது. பக்தி நாட்டத்திற்கு மொழி ஒரு பிரச்சினையாக தோன்றாது. சமய உணர்வும், ஒழுக்கமும் விஞ்சிய இடத்தில் ஜாதிமத பேதங்களோ, மொழிகளோ நிற்காது. அர்த்தநாரி குருவின் மார்க்கமாய் தீட்சைபெற்று இறைபணியில் தொண்டாற்ற நினைத்து 1912ஆம் ஆண்டு திருவண்ணாமலைக்கு வந்து, ரமணரை குருவாக ஏற்க நினைத்து, அவரிடம் சென்ற போதிலும், கை கூடாமைக் கண்டு, மறுபடியும் வடநாடு யாத்திரை மேற்கொண்டார். மறுபடியும் 1914-ம் ஆண்டு திருவண்ணாமலையில் ரமணரை தரிசித்தபோது, இவரை, கீழே சென்று சேஷாத்ரி சுவாமிகளை தரிசிக்க சொன்னார். அவ்வாறே செல்லும் தருணத்தில், சேஷாத்ரி முனிவரே எதிர்பட்டு, ''வா, முருகா, உன் மந்திரம் திருப்புகழ் அல்லவா! அர்த்தநாரி'', என்று சொன்னதும், அர்த்த நாரி உளம் புளகாங்கிதம் அடைந்து, அவரது பாதத்தில் வீழ்ந்து வணங்கினார். சேஷாத்ரி முனிவர் இவரை வள்ளிமலை சென்று திருப்புகழ் பரப்பு வாயாக என்று உத்திரவிட, அர்த்தநாரி, குருநாதரை, உங்களது தரிசனம் மறுபடியும் அடியேனுக்கு எப்போது கிடைக்கும் எனக் கேட்டதற்கு, நான் உமக்கு வள்ளிமலையிலேயே தரிசனம் தருவேன் என அருளிச் செய்ததை மனத்தில் கொண்டு, வள்ளிமலையில் 12 வருடம் தவமியற்றி குறக்குலத்தோர் முதல் குருகுலத்தோர் வரை திருப்புகழ் பாடம் சொல்லிவந்தார்.

வள்ளியின் அநுக்ரகத்தால் பாடலுக்கு ஏற்ற ராகமும் தாளமும் அமைத்துக் கற்றும் தந்தார். இன்றைய நாளில் அன்பர்கள் பலர் நாட்டின் பல பாகங்களிலும் திருப்புகழ் சபைகள் பல நிறுவியும், பாடியும் வருவதற்கு, வள்ளிமலை திருப்புகழ் சுவாமிகளே மூலபுருஷராவார்.

4.12.1929-ல் சேஷாத்ரி சுவாமிகள் மகாசமாதி அடைந்தபோது, திருவண்ணாமலை வந்து, சமாதி காரியங்களில் கலந்து கொண்டார். ஒரு சமயம், திருவண்ணாமலை சுடுகாட்டில் இருந்த வெட்டியான், கனவில், தாம் வள்ளிமலையில் உள்ளதாய் சொன்ன தாகவும், அவன் நேரே வள்ளிமலை திருப்புகழ் ஆஸ்ரமத்திற்கு வந்தபோது, ஒரு பாறை இடுக்கில் கீரீப்பிள்ளை அவதாரத்தில் சேஷாத்திரி சுவாமிகள் அவனுக்குக் காட்சி தந்ததைக் கண்டான். திருப்புகழ் சுவாமிகள் அன்றிலிருந்து எங்களை தினமும் சாதத்தில் வெல்லத்தை பிசைந்து, அவருக்கு வைக்கச் சொல் வார். அப்பொழுது அடியேன் 14 வயது இருக்கும். சுவாமிகளிடத்தில் திருப்புகழ் பாடம் கேட்க எமது தந்தையார் வள்ளி மலைக்கு அனுப்பிவைப்பார். அது சமயம் அடியேனும், கீரிப்பிள்ளைக்கு வெல்ல சாதம் வைப்பது வழக்கம். இதனுடைய அருட் சக்திதான் எங்கள் குடும்பம் திருப்புகழில் ஈடுபாடு கொள்ளச் செய்தது. வள்ளிமலை சுவாமிகள், 1921-ம் வருடம் திருப்புகழ் அடியார்களுடன், திருத்தணித் திருப்புகழ்த் திருவிழாவினை துவக்கி வைத்த மூல புருஷராவரார். அந்நாளில், மைசூர் சுவாமிகள் என்றும், முருகப்ரமம் என்றும், திருப்புகழ் சுவாமிகள் எனவும் இவரை வழங்கினர். திருப்புகழ் சுவாமிகள், அடியார்கள் இல்லங்களில் தோன்றாக் காட்சியாக விளங்கியும் வந்தார்.

22.11.1950-அன்று தம் தேகத்தை உதறிவிட்டு கைவல்ய சமாதி அடைந்தார்.

வள்ளிமலையில் எந்த குகையில் அவர் 12 வருடம் தவமியற்றி, திருப்புகழ்பாடிக் காலம் கழித் தாரோ அதே குகையில் அவரது திருமேனி மகா சமாதி செய்யப்பட்டு, அவரது சீடர்களால் வருடா வருடம் கார்த்திகை அஸ்வினி நட்சத்திரத்தன்று குரு பூஜை சிறப்பாக நடத்திவரப்படுகிறது. சுவாமிகள் தம் வாழ்நாளில், திருப்புகழாதிய பாடல்களிலிருந்து, தொகுத்தளித்த நூல்கள் :-

1. திருப்புகழ் பாராயணத் தவ நெறித் திருமுறை.
2. வேல் மாறல் (வேல் வகுப்பை அடிப்படையாக கொண்டது).



3. மெய்க்காவல்
4. கோபூஜை
5. அனுஷ்டானத் திருப்புகழ்
6. மனதுக்கும் அறிவுக்கும் தர்க்கம்
7. பாராயணக்குண்டு (2-ம் யுத்தம் நேரிட்ட போது)
8. வள்ளிக் கல்யாணம் (திருப்புகழிலிருந்தே)
9. மார்கழி மாத பாராயணத்திருமுறை போன்றவை களாகும்.

தணிகைமணி வ.சு. செங்கல்வராயப் பிள்ளைத் திருப்புகழ் சுவாமிகளைப் போற்றிப் பாடியுள்ள பாடல் பின்வருமாறு:

''சின்னமாம் ஏகதாரை திருக்கையிலேந்தி இந்த
சென்னை மாகாணமெல்லாம் திருப்புகழ்
என்னும்தேனை
சொன்னமா மாரிபோல சுவையமுது ஒழுகச்
சொல்லும்,
தன்னை நேரில்லா சச்சிதானந்தர் பதங்கள்
போற்றி.''

★ ★ ★

# சிவராத்திரி

- திருமதி மீனாட்சி கோகுலவாசன்

கங்கைக் கரையில் ஓடக்காரனாக இருந்த குகன் ராமாயண மகாகாவியத்தின் மூலம் பிரபல மாகிவிட்டவன். ராமன் குகனை மார்புறத்தழுவி, 'நாங்கள் இதுவரை நால்வராக இருந்தோம், இன்று முதல் உன்னோடு ஐவரானோம்'' என்று கூறி, தனது சகோதர தத்துவக் கொள்கையைத் துவக்குகிறான். எனவே குகனைத் தெரியாதவர் இல்லை!

இந்த குகனுக்கு ஒரு பூர்வஜென்மக் கதை உண்டு! சிவமகாபுராணத்தை வாசித்தவர்கள் இந்தக் கதையை அறிவர். குகன் பூர்வஜென்மத்தில் ஒரு சாதாரண வேடுவனாக இருந்தான். அவன் பெரிய குடும்பஸ்தன். மிருகங்களை வேட்டையாடுவது தவிர வேறொன்றும் அறியாதவன். ஒரு நாள் அவன் காடு முழுவதும் அலைந்து திரிந்தும் ஒரு பறவையைக் கூட வேட்டையாட முடியாமலாகிவிட்டது. வெறும் கையால் வீடு திரும்புவது வீண் என்பதால் அவன் மிகவும் மனம் சோர்ந்து போயிருந்தான். நேரமோ இரவாகிவிட்டது. அப்போது அவன் ஒரு குளக் கரையை அடைந்திருந்தான். இரவில் நீரருந்த அங்கே எந்த மிருகமாவது கட்டாயம் வரும்; காத் திருந்தால் நிச்சயம் பலனுண்டு என்றெண்ணிய அவ்வேடன் குளத்தில் சிறிது நீர் அருந்திவிட்டு, தன்னிடமிருந்த சுரைக் குடுவையிலும் நீர் நிரப்பி எடுத்துக்கொண்டு அருகிலிருந்த ஒரு பெரிய மரத்தின் மீது ஏறி அமர்ந்துகொண்டான். பசியாலும் களைப் பாலும் அசந்து உறங்கிவிடக்கூடாதே என்பதால் சுரைக் குடுவையிலிருந்த நீரால் கண்களைத் துடைத்து விட்டவாறே அவன் வழி மீது விழிவைத்துக் காத் திருந்தான்.


அவன் கண்களைத் துடைக்க முயன்ற போதெல்லாம் சுரைக் குடுவையிலிருந்து நீர் சிறிது கீழே இருந்த சிவலிங்கத்தின் மீதும் விழுந்தது. அவன் அமர்ந்திருந்த மரமோ வில்வமரம். உறக்கம் வராமலிருக்க அவன் வில்வப்பத்திரங்களைப் பறித்து எறிந்து கொண்டேயிருந்தான். அவை அனைத்தும் ஈசன் திருமேனியில் விழுந்து கொண்டிருந்தன.

அன்றைய தினம் சிவராத்திரி புண்ணிய தினம். வேடன் இது பற்றி எதுவுமே அறியாதவன். எனினும் அளவற்ற கருணையுடன் சிவபெருமான் அந்த வேடன் பட்டினி கிடந்ததையே உபவாசமாகவும், முகம் கழுவிய நீரையே அபிசேகமாகவும், உதிர்ந்த வில்வங் களையே அர்ச்சனையாகவும் ஏற்று, அவனுக்கு அருள் பாலிக்கத்திருவுளம் கொண்டார்.

அதே சமயம் அங்கே ஒரு மான் நீர் அருந்த வந்தது. அதைக் கொல்ல வேடன் வில்லில் அம்பு பூட்டினான். அதைக் கவனித்து விட்ட மானோ அவ னிடம் புலம்பியது. 'என்னைக் கொன்று விடாதே; நான் எனது இருப்பிடம் சென்று குட்டிமானைப் பார்த்து, அவற்றை என் கணவனான ஆண்மானிடம் ஒப் படைத்துவிட்டு வந்துவிடுகிறேன்; பிறகு நீ என்னைக் கொன்று பசியாறலாம்' என்ற அதன் புலம்பல் ஈசனருளால் வேடனுக்குப் புரியலாயிற்று. அவனும் சம்மதித்தான். இப்படி அடுத்தடுத்து இரண்டு மான்கள் வந்தன! ஒவ்வொன்றுமே அவனிடம் மன்றாடின. வேடன் அவற்றைத் திரும்பிச் செல்ல அனுமதித்து விட்டு மீண்டும் அவை வரும் எனக் காத்திருந் தான். ஏதேனும் ஒரு மான் வந்திருந்தாலே போதும்; ஆனால் அவை குடும்பத்தோடு அங்கு வந்து நிற் கின்றன. வேடனோ ஞானம் வரப்பெற்றவனாய், அவற்றைக் கொல்லாது விடுகிறான்.

சிவபெருமான் அவன் முன் தோன்றி அருள் பாலிக்கிறார். அடுத்த பிறவியில் வேடர்க்குல தலைவ னாக, அரசனாகப் பிறந்து, கங்கைக் கரையில் வாழு மாறும், ராமனின் நல்லன்பைப் பெற்று நற்கதியை அடையுமாறும் ஈசன் அருளுகிறார். அங்கே வைபவத் திற்கு அடிப்படை அமைக்கப்படுகிறது. சிவராத்திரி தினத்தில் அறியாமலே நிகழ்த்திய சிவபூஜையால் அந்த வேடன் ராமாயண மகாகாவியத்தில் இடம் பெற்று, காலத்தை வென்று வாழும் உன்னத நிலையை அடைந்தான் என்றால், அறிந்தே செய்யும் சிவபூஜைக்கு எவ்வளவு பலன் கிட்டும்!?

வேடன் மான்களைத் திரும்பிச் செல்ல அனு மதித்துவிட்டு, மீண்டும் அவை வரும் எனக் காத் திருந்தான். வேடனுக்கும் மான்களுக்கும் இடையே நிகழ்ந்த உரையாடல் என்பதெல்லாம் நமது முன் னோர் நமக்கு உணர்த்திவிடுகிறது என்பது, நமது முன்னோர் அறிவுறுத்தும் அற்புத அறநெறிகளே அன்றி வேறில்லை.



நீதி சாஸ்திரங்கள் ஒழுக்க நெறிகளை மிக அழகாக இந்த உரையாடல்கள் மூலம் நமக்கு உணர்த்தி விடுகின்றனர் என்றே கூறலாம்! 'சத்தியம் தவறுவது பாவம்; பூமியைக் காலால் உதைப்பது பாவம்; மனைவிக்கு துரோகமிழைத்துப் பல பெண்க ளிடம் உறவு வைத்துக் கொள்வது குற்றம்; சாஸ்திரங் களை, தருமங்களைக் கைவிடுதல் நல்லதல்ல; விஷ்ணு பக்தன் சிவநிந்தனை செய்தல்; சிவ பக்தன் விஷ்ணு நிந்தனை செய்தல் எல்லாம் நரகம் செல்லவே வழி வகுக்கும்; வாக்குத் தவறுதல் - வஞ்சகம் செய்தல், பிதுர் கர்மாக்களைக் கைவிடுதல், பொய் சொல்லுதல் என்று அத்தனை பாவங்களையும் கூறி, சொன்ன படி திரும்பா விட்டால் நாங்கள் இந்த பாவங்களைச் செய்தவர்களாவோம் என மான்கள் கூறுகின்றன!

பிறகு அந்த அனைத்து மான்களுமே வந்து நிற்கின்றன; அந்த மிருகங்கள் கூட சத்தியம் காக்க, சுயநலம் இன்றி எவ்வாறு போட்டியிடுகின்றன என் பதை சிவ புராணம் மிக அழகாக எடுத்துரைக் கின்றது. ஏதேனும் ஒரு மான் வந்திருந்தாலே போதும்; ஆனால் அவை குடும்பத்தோடு அங்கு வந்து நிற் கின்றன. வேடனோ ஞானம் வரப்பெற்றதினால் அவற்றைக் கொல்லாமல் விட்டு விடுகிறான் என்பதாகும்.

சிவராத்திரி மகிமைப் பற்றி எத்தனையோ புராணக் கதைகள் உண்டு! பார்வதி தேவி பரமேஸ் வரனின் கண்களை மூடியதால் உலகம் இருண்டது என்றும், அன்றைய தினத்தின் நினைவாகவே சிவராத் திரி கொண்டாடப்படுகின்றது என்பதும் ஒரு கருத்து ஆகும்!

பாற்கடலைக் கடைந்து அமுதம் எடுத்த நாளில் ஆலகாலவிஷத்தை, உலக உயிர்க் குலத்தைக் காக்கும் பொருட்டு ஈசன் அருந்தியபோது, சிறிது மூர்ச்சையற்றவர் போன்று காட்சியளித்ததாகவும் அப்போது அண்டசராசரங்கள் முழுக்க இருள் பரவிய தாகவும், உடனே தேவர்கள் அனைவரும் கூடி நின்று ஈசனைத் தொழ பரமேஸ்வரன் திருநயனங்கள் மலர விழித்ததாகவும் அத்திருநாளே சிவராத்திரி என்ப தாகவும் புராணம் கூறுகிறது. இந்த வரலாற்றின் படி, ஆந்திர மாநிலத்தில் 'சுருட்டப்பள்ளி' என்ற கோயிலில், சிவபெருமான் பார்வதி தேவியின் மடியில் தலை வைத்துப் படுத்திருப்பதாகவும், விஷம் கழுத் திலேயே தங்கும்படி, இரவெல்லாம் பார்வதி தேவி தவமிருந்த இரவே சிவராத்திரி என வழங்கப்படு வதாகவும் கூறுகிறார்கள். உலகிலேயே பள்ளி கொண்ட ஈசன் இங்கு மட்டும்தான் என்றும் சொல் கிறார்கள்.

பிரபஞ்சம் தோன்றிய ஆதிநாளில் விண்ணுக்கும், மண்ணுக்குமாக திக்குகள் தோறும் படர்ந்து பரவி மூண்டெழுந்த கனலாய் பரஞ்ஜோதியாய் ஒளி உருவம் காட்டி அரனார் திருக்காட்சி அருளிய திருநாளே சிவராத்திரி என்றும் புராண நூல்கள் கூறுகின்றன. இதனை ஆண்டுதோறும் மாசி மாதம், கிருஷ்ண பட்சம், சதுர்த்தசி திதி, திருவோண நட்சத்திரத்தன்று நள்ளிரவு பதினொன்றரை மணி முதல் ஒரு மணிவரை உள்ள இலிங்கோற்பவ புண்ணிய காலத்தில் மிகச் சிறப்பாகக் கொண்டாடுவது வழக்கம். இரவு முழுக்க நான்கு கால பூஜை எல்லா சிவாலயங்களிலும் நிகழும்.

சிவபெருமான், விஷ்ணுவை நோக்கி, ''விஷ்ணுவே! உத்தமமான விரதத்தை உனக்குச் சொல்கிறேன்! வேதங்கள், ஸ்மிருதிகள், புராணங்கள், தர்மசாஸ்திரங்கள் இவைகளில் எல்லாம் சொல்லப்பட்டுள்ள, இரகசியங்களில் எல்லாம் அதிரகசியமான விஷயத்தை உனக்குச் சொல்கிறேன். உலகத்தில் முக்தியளிக்கத்தக்கவை நான்கு. அவை; சிவார்ச்சனை உருத்திரபாராயணம், அஷ்டமி சோமவாரம், கிருஷ்ணபட்சத்து சதுர்த்தசி (பிரதோஷம்) இந்த மூன்று நாள் உபவாசம், காசி க்ஷேத்திரத்தில் மரணம் என்பவையாம். இந்த நான்குமே முக்தியளிக்கத் தக்கவை. இவை நான்கிலும் சிவராத்திரி விரதமே மிகவும் உத்தமமானது. ஆகையால் புத்தி முக்திகளை விரும்புவோர், இந்த விரதத்தை அனுஷ்டிக்க வேண்டியதாகும். இதைவிட சிறந்த விரதம் ஒன்றும் இல்லை.'' என்றார்.

திருமாலும், இவ்விரதத்தை விவரமாகச் சொல்ல வேண்டும் என்று கேட்டுக் கொண்டார்.


சிவபெருமானும் கூறலானார். ''இந்த விரதம் யாவருக்குமே தர்மசாதனமானது; நான்கு வருணத்தினரும், பிரம்மச்சாரி முதலிய ஆசிரமத்தினரும், பெண்களும் குழந்தைகளும் இந்த விரதத்தை அனுஷ்டிக்கலாம். மாசி மாதத்தில் வருகின்ற கிருஷ்ண பக்ஷ சதுர்த்தசியின் நள்ளிரவு, பதினான்கு நாழிகையானது கோடி பிரும்மஹத்திகளை நசிக்கச் செய்யும். ஆகையால் அந்தத் தினத்தில் செய்யத்தக்க செயல்களைச் சொல்லுகிறேன். அன்று விடியற் காலையில் எழுந்து, மானுடப்பிறவி எடுத்தல் அரிது என்ற மகிழ்ச்சியுடன், 'அது துக்கமுடையதும், சாரமற்றதுமாக இருந்தால் அந்த மானுடப்பிறவியை, இந்த விரதத்தால் பயன்படுத்தும்படிச் செய்வேன்; என்று நிச்சயித்துக் கொண்டு, அருகிலிருப்பவரையும், இந்த விரதத்தை அனுஷ்டிக்கச் செய்ய வேண்டும். பிறகு நித்திய கடன் முடித்து, புண்ணிய தீர்த்தத்தில் நீராடி, அனுஷ்டானங்களுடன் விரதம் செய்யத் துவங்க வேண்டும்.

சிவாலயத்திலிருந்து எந்தக் காரியத்தை செய்வதானாலும் ஒன்று அனந்தமாகும். ஆகையால் சிவ சந்நிதானத்திலிருந்து, வழக்கப்படி சிவ பூஜையை முடித்து, வணங்கி, ''வாம தேவா! மகாதேவா! சதாசிவா! நீலகண்டா, உமது கருணையால் சிவராத்திரி விரதத்தை அனுஷ்டிக்க வேண்டும் என்று இச்சை கொண்டேன். ஆயினும் அது விக்கினமின்றி முடியும்படி, இந்த விரதம் முடியும் வரை காமம் முதலியவைகள் என்னைத் துன்புறுத்தாமலும், துஷ்டர்களுடன் வார்த்தையாடல், அசுத்தர்களைத் தொடுவது, ஐம்புலன்வழி மனத்தைச் செலுத்துதல், ஜலபானம் செய்தல் முதலியவைகள் விலகவும் அனுக்கிரகிக்க வேண்டும்'', என்று வேண்டிக்கொண்டு, பிறகு பூஜைக்குரிய பொருள்களைச் சேகரித்துக்கொள்ள வேண்டும். தன் இருப்பிடத்தருகில் உள்ள சிவன் கோயில் என்றால் சிறப்பாகும். அக்கோயிலிலேயே விதிப்படி நீராடி தூய்மையாக துவைத்து உலர்த்திய ஆடைகளை உடுத்திக்கொண்டு, ஆசமனமும் முறைப்படி செய்ய வேண்டும். முதலில் அரசலிங்கமான அந்தப் பார்த்திவ லிங்கத்திற்கு, மந்திரபூர்வமான உபசாரத்துடன் பூஜை செய்யவேண்டும். மந்திரமில்லாமல் பூஜை செய்யக் கூடாது. எந்தெந்த திரவியங்களுக்கு, எந்தெந்த மந்திரங்கள் சொல்லப்பட்டிருக்கின்றனவோ அந்தந்த திரவியங்களை அந்தந்த மந்திரங்களைச் சொல்லியே பூஜை செய்ய வேண்டும். பிறகு பாட்டு, வாத்தியம், நடனம் இவற்றைப் பக்தியுடன் சமர்ப்பிக்க வேண்டும். இவ்வாறு முதல் ஜாமத்தில் பூஜை செய்து சிவமந்திரம் ஜபித்துத்தான் தினந்தோறும் பார்த்திவ லிங்க பூஜை செய்யும் வழக்கமுடையவனாக இருந்தால் தன் வழக்கப்படியே பார்த்திவ லிங்க பூஜை செய்யவேண்டும். அல்லது முன்னதாகவே பார்த்திவ லிங்கபூஜை செய்து விட வேண்டும்.

பிறகு சிவபெருமான் தன்னிடம் தயை வைக்கும்படி பலவித சிவஸ்தோத்திரங்களால் தியானிக்க வேண்டும். சிவ மகிமையை பிறருக்குச் சொல்ல வேண்டும். அல்லது பிறர் சொல்லச் சிரவணஞ் செய்ய வேண்டும். இவ்வாறு நான்கு ஜாமங்களிலும் நான்கு பார்த்திவ லிங்கங்களைச் செய்து ஆவாகனாதி விசர்ஜனாதி பூஜைகளைச் செய்து முடித்து ஸ்தாபித லிங்கத்தையும் பூஜை செய்வித்து நீராடி, சந்தியா வந்தனம் முதலியவற்றை முடித்து, எம்பெருமானே! உன் கிருபையால் நான் ஏற்றுச் செய்த சிவராத்திரி விரதத்தை முடித்தேன். என் சக்திக்கு ஏற்ப நான் செய்த, தவத்துக்கு தேவரீர் மகிழ்ந்து தக்க பயன் தரவேண்டும்.'' என்று மலர்களைத் தூவி அஞ்சலி செய்து பார்வதி தேவியையும் வணங்கி, தான் செய்த பூஜாப்பயனைச் சிவப்ரீதி செய்து, ஜலபானஞ் செய்து, அவ்விரதத்தை நியமத்தை விட வேண்டும். இத்துடன் சிவராத்திரி விரதம் பூர்த்தியானதாகும். ■

# சிவ சரணம்

- கவிஞர் சொ.பொ. சொக்கலிங்கம்



அன்னையே போற்றி, ஐயனே போற்றி,
அன்னையுள் ஐயனாய் அமர்ந்தாய் போற்றி
எல்லையே இல்லா திருப்பாய் போற்றி
'இல்லா திருக்கும்' இயல்பாய் போற்றி
உலகம் உதிக்குமுன் உதித்தாய் போற்றி
ஐம்பெரும் பூதம் ஆனாய் போற்றி
ஐம்பெரும் பொருளின் ஆதியே போற்றி
முதலும், முடிவும் இல்லாய் போற்றி
முதலாய் என்றும் முடிப்பாய் போற்றி.

பிரபஞ்சம் பிறக்குமுன் பிறந்த முதல்ஒளி
'பிரணவ மந்திரம்' பிறப்பதன் எதிரொலி
பிறப்பவை எல்லாம், இறப்பதுன் நியதி
பிறப்பே, இல்லா, பிறவா இறைநீ!
இறக்கும் உயிரோ பிறப்பதுன் நியதி
இறப்பது உடலே, இருப்பதோ ஆத்மா
ஆத்மா பிறப்பதோ, அழிவதோ இல்லை.
ஆத்மா அடைக்கலம், அடைவதுன் திருவடி
காலச் சக்கரம், கடையின்றிச் சுற்றும்
மாளும் பல்இனம், மல்கி மடியும்.

ஆக்கல், காத்தல், அழித்தல், தொழிலாய்
ஆக்கிய உன்குணம் அதிசய ரகசியம்
எல்லாப் பொருளையும் இயக்கும் சக்தி
எல்லா உயிரையும் இணைக்கும் சக்தியே
இயற்கையின் இணைப்பால் எல்லாப் பொருளும்
இயற்கையின் இணைப்பால் எல்லா உயிரும்
இயங்க வைப்பதுன் இயற்கையின் நியதி
இயற்கையும் உன்னுள் இணைந்ததும் ஒன்றாய்
மறைந்தே இயங்கும் மாபெரும் சக்தியை
மறைத்ததும் ஏனோ? மாந்தரின் மடமையோ?

எத்தனை, எத்தனை யுகங்கள் மாறியும்
சுத்தமாய் இதுவரை துலங்கிய தில்லையே!
கலியுகம் காணும் கணிப்பொறி ஞானம்
ஒலியின் வேகத்தில் உயர்வதைக் கண்டும்,
இரவாய்ப், பகலாய், இருளாய், ஒளியாய்,
இரட்டையாய் எதிர்புதிர் இயங்கலுன் இயற்கையோ?
மோட்சமாய், நரகமாய், முன்வினை தன்வினை
வீட்சியாய், வெற்றியாய், விதியாய், மதியாய்,
இன்பமாய்த் துன்பமாய், அன்பாய் பகைமையாய்,
கண்டிடும், எதிர்புதிர் காண்பதும் செயற்கையோ?

உண்மைக்கு எதிராய்ப் பொய்மை வந்ததும்,
நன்மைக்கு எதிராய்த் தீமை வந்ததும்,
அன்பிற்கு எதிராய்ப் பகைமை வந்ததும்,
இன்பத்திற் கெதிராய்த் துன்பம் வந்ததும்
நன்மையே செய்வோர் நலிவதும், உலகில்
நன்மையே செய்யார் நலம்பல காண்பதும்
கலியுகக் காட்சியாய் காண்பதின் மர்மம்
அழியாத நீயும், அறிய வைப்பாயோ?
அறிய முடியாத ஆயிரம் ரகசியம்,
தெரியாது இதுவரை திணறுகின் றேனே.

உன்னடி சேர்த்து, உன்னருள் புரிந்து,
மண்ணில் இவ்வுடல், மடியும்வரை காத்து
வினைகளும், பிணியும் விருப்பும், வெறுப்பும்
அண்டா திருக்க அருள்பா லித்து
கலையாத தியானமும் கண்முன் உன்காட்சியும்
நிலைபெறச் செய்து நினைவெலாம் சிவமாய்
நிறைந்து சிறக்க, நின்தாள் பணிந்தேன்
விறைந்து காத்திட வேண்டினேன், சரணம்.

'நமச்சி வாய' நாதனே சரணம்.
நமனும் அஞ்சிடும், நந்தியே சரணம்.
இன்கவி சரணம், இறைவா சரணம்.
அன்பே சரணம், சரணம் சரணமே.

***

# திருமூல முனிவர் வரலாறு

- டாக்டர் சிவப்பிரியா, தில்லிப்பல்கலைக்கழகம்

உலகிலேயே மிகக்குறைந்த வயதுள்ள இசைப் புலவர் திருஞான சம்பந்தர் என்றால் மிகவும் வயதான புலவர் திருமூலர். மூன்று வயதிலேயே செந்தமிழிசை பாடிய தெய்வ இசைஞானி திருஞானசம்பந்தரையும் பல்லாயிரக் கணக்கான ஆண்டுகள் வாழ்ந்து தமிழ் வேத-ஆகமம் பாடிய திருமூலரையும் போன்று எங்கும் இல்லாத அற்புதங்களையும் அதிசயங்களையும் கொண்டது அருமைத் தமிழ்நாடு. கடவுளை நேரில் கண்டு வாழ்ந்து பரம்பொருளை அனுபவித்துப் பாடிய தெய்வீக நால்வரின் புனித வரலாறு அவர்கள் அருளிச்செய்த தேவார மணிவாசகத் திருமுறைகளிலிருந்து அறிய வருவது போன்று திருமூல முனிவரின் வாழ்க்கை வரலாறும் அவர் அருளிச் செய்த திருமந்திரத்திலேயே காணப்படுகின்றது. திருமந்திரத்தில் காணப்படும் செய்திகளையே வரலாற்றுப் புலவரான சேக்கிழார் பெரியபுராணத்தில் தொகுத்துக் கூறி விளக்கிக் கூறியுள்ளார்.

யான் எனது என்ற உணர்வாகிய ஆணவம், நல்வினை தீவினை என்ற இருவினைகளான கர்மம், பிறவிகளான மாயை என்ற மூன்று மாசுகளும் நீங்கிச் சுத்தமடைந்து மீண்டும் பிறவா நிலைபெற்று சிவமயமாகி எண்குண நிலையடைந்து புனிதத் தூய ஆத்மாக்கள் வாழும் ஒளிமயமான வெளி சிவலோகமாகும். தெய்வலோகம் தேவலோகம் என எல்லா உலகங்களுக்கும் அப்பாற்பட்ட வெளியாகிய திருக்கைலாயம் என்று பெயர் பெற்ற சிவலோகத்தில் இருக்கும் சிவகணநாதர்கள் பலர். அவர்களில் சிவமுனி சித்தசன் என்ற கணநாதர் தமிழ் வேத ஆகமங்களைப் பாடி இறைவனைத் துதி செய்ய விரும்பினார். வானவர்கள் எல்லாம் வந்து தொழும் பரம பதத்தில் இருந்த அந்த கணநாதரின் விருப்பம் நிறைவேறுவதற்குப் பரமசிவம் திருவருள் புரிந்தார். சர்வேஸ்வரனின் திருவருளால் சிவ கணநாதர் ஒரு முனிவர் ஆனார். திருக்கைலாயத்திலிருந்து பறந்து வந்த அந்த ஞான முனிவர் தேவலோகத்தில் சில காலங்கள் தங்கினார். அதன் பின் வான்வழியே அசுரர்களும் மனிதர்களும் வாழ்கின்ற பூலோகத்திற்கு வந்தார். இவ்வாறு சிவலோகத்தில் இருந்த சிவகணநாதர் ஒருவர் ஞானமுனிவராகி தமிழ்வேத ஆகமம் பாட பூமிக்கு வந்ததை

நந்தி அருளாலே நாதனாம் பேர் பெற்றோம்
இருந்தேன் இராப் பகல் அற்ற இடத்தே
இருந்தேன் இமையவர் ஏத்தும் பதத்தே
இருந்தேன் என் நந்தி இணையடிக் கீழே

தத்துவம் முத்தமிழ் வேதம் உணர்ந்தோமால்
இங்கு யான் வந்த காரணம்
... சீலாங்க வேதத்தைச் செப்ப வந்தேனே

செப்பும் சிவாகமம் என்றும்
அபபேர் பெற்றும் அப்படி நல்கும் அருள்நந்தி

சிவமுனி சித்தசன் வெல்கின்ற ஞானத்து
மிக்கு ஓர் முனிவராய்
பல்கின்ற தேவர் அகரர் நரர் தம்பால்
ஒல்கின்ற வான்வழி ஊடு வந்தேனே

என்னை நன்றாக இறைவன் படைத்தனன்
தன்னை நன்றாகத் தமிழ்ச் செய்யுமாறே

என்று திருமந்திரம் கூறுகின்றது.

பூமிக்கு வந்த சிவஞான முனிவர் புண்ணியத் திருத்தலங்களிலேயே மிகப் புனிதமானதும் முதன்மை வாய்ந்ததுமான கைலாயமலையை அடைந்தார். அங்கு

அறுகு எடுப்பார் அயனும் அரியும் அன்றி மற்று
இந்திரனோடு அமரர் நறுமுறு தேவர்
கணங்கள்எல்லாம் நம்மிற்பின்பு அல்லது எடுக்க
ஒப்போம்
(மாணிக்கவாசகர்)

என முதலில் சிவபூஜை செய்யும் உரிமை பெற்ற வரும் பிரம்மன், விஷ்ணு, இந்திரன் போன்ற தேவர்களுக்கெல்லாம் வழி காட்டுபவருமான திருநந்தி தேவரைக் கண்டு வணங்கினார்.

தென்திசையில் தோன்றிய எண்ணற்ற தமிழ் ஆகமங்களிலே அழிந்தவை போக எஞ்சி நின்ற இருபத்தெட்டு ஆகமங்கள் வட மொழியிலும் ஆக்கப்பட்டு இருந்தன. இந்த இருபத்து எட்டு ஆகமங்களிலே ஒன்பது சிவாகமங்களை ஞான முனிவருக்குத் திருநந்தி தேவர் செந்தமிழிலும் சமஸ்கிருதத்திலும் உபதேசித்து அருளினார். திருநந்திதேவரின் அருள் பெற்ற ஞானமுனிவர் சிவ பரம்பொருளைத் தொழுது

கயிலைமலையில் தவம் செய்தார். பலகாலங்கள் தவம் செய்த ஞான முனிவருக்குக் கயிலைப் பெருமான் காட்சி தந்தருளி அஷ்ட மகாசித்திகள் எனப்படும் எட்டு மிகப் பெரிய தெய்வீக ஆற்றல்களை அருளிச் செய்தார். ஞான முனிவரின் முடியில் திருவடிகளைப் பதித்து வைத்த சித்தீஸ்வரன் அணிமா, லகிமா, மகிமா, கரிமா, பிராத்தி, பிரகாமியம், ஈசத்துவம், வசித்துவம் என்று புகழ் பெற்ற அஷ்ட மகா சித்திகளை அருளிச் செய்து மறைந்தார். மிகச் சிறியனவாகவோ மிகப் பெரிய வடிவிலோ வேண்டிய உருவத்தை எடுத்துக் கொள்ளுதல், ஆகாயத்தில் பறந்து வேண்டிய இடங் களுக்குச் சென்று வருதல், மரணமில்லாமல் எப் போதும் இளமையோடு இருத்தல், உயிரை வேறு உடலில் புகுத்தும் கூடுவிட்டுக் கூடு பாய்தல், தொலை தூரத்தில் நடப்பவற்றை நடக்கும்போதே தெரிந்து கொள்ளுதல், நீர்மேல் நடத்தல் நெருப்பில் படுத்தல் என ஐந்து பூதங்களையும் அடக்கியாளுதல், எது ஒன்றையும் உண்டாக்கிப் பாதுகாத்து அழித்தல், தன் விருப்பப்படி எப்பொருளையும் மாற்றியமைத் தல் ஆகிய எட்டுமகா சித்திகளைப் பெற்ற ஞான முனிவர் அகத்திய முனிவரைக் காண்பதற்குப் பொதிகை மலை நோக்கிப் புறப்பட்டார். வாயற்ற உயிர்களுக்கெல்லாம் இறைவனான பசுபதீஸ்வரர் எழுந்தருளியிருக்கும் நேபாளம், நர நாராயணனும் பாண்டவர்களும் கண்ணனும் வழிபட்ட கேதாரம், சந்திரனுக்கு அருள்புரிந்த சோமநாதர் எழுந்தருளி யிருக்கும் சந்திரதீபம் (திபெத்), மகாவிஷ்ணு அன்ன பூரணி விசாலாட்சி போன்ற தெய்வங்களும் பல் வேறு தேவர்களும் சிவபூஜை செய்து வரம் பெற்ற காசி மற்றும் பிற கங்கைக் கரைத் தலங்களையெல்லாம் கண்டு தொழுது தென்திசைக்கு வந்தார். திருமகளும் முருகனும் வழிபட்ட ஸ்ரீசைலம் எனப்படும் பருப் பதம், பரமசிவம் வாயுவாக விளங்கும் திருக் காளத்தி, பேய்களுக்கும் ஈசன் பேரருள் புரிந்து நடனமிடும் திருவாலங்காடு ஆகிய திருத்தலங் களை எல்லாம் கண்டு வழிபட்ட பின் காஞ்சிபுரம் சென்றார். காஞ்சியில் மாமரத்துச் செம்பொருளான ஏகாம்பரேசுவரரைத் தொழுத பின் அங்கு தவயோக முனிவர்களோடு சிலகாலம் தங்கினார்.

பின்னர் திருவதிகை வீரட்டானத்தை அடைந் தார். பூமி தேராகவும் சூரிய சந்திரர்கள் சக்கரங்களாக வும், வேதங்கள் குதிரையாகவும் பிரம்மன் தேரோட்டி யாகவும் மகாவிஷ்ணு காளை வாகனமாகவும் அம் பாகவும், வாயு அம்பின் இறகாகவும், அக்கினி அம் பின் முனையாகவும் இருந்து பல்வேறு தேவர்களும் பணிபுரிந்து வேண்டியபோது சிவபரம்பொருள் சிரிப் பாலேயே முப்புரம் எரித்து மூன்று அசுரர்களுக்கும் முக்தி வழங்கிய தலமான திருவதிகையில் வீரட் டானேசுவரரைத் தொழுத பின்னர் ஞான முனிவர் தில்லைக்குச் சென்றார். அங்கு பதஞ்சலி, புலிக்கால் முனிவர் என்னும் வியாக்கிர பாதர் ஆகிய முனிவர் களுடன்கலந்து இருந்து தில்லை நடராசப் பெருமானின் ஆனந்தத் திருநடனத்தைக் கண்டு களித்தார். உலகங் களையெல்லாம் இயக்குகின்ற ஆடல்நாயகனின் திரு நடனத்தைச் கண்டு போற்றித் தொழுத பின் பல தலங்களையும் வணங்கி திருவாவடுதுறையை அடைந்தார். தேவலோகப் பசுவாகிய காமதேனு சிவலிங்கத்தின் மேல் பால் சொரிந்து வழிபட்ட திருத்தலமான திருவாவடுதுறையில் சிவ செம் பொருளை வணங்கிய பின்னர் அங்கு தங்கினார். காவிரிக் கரையில் சிவலிங்கம் நிறுவி நாள்தோறும் ஆகம விதிப்படி முறையாகப் பூஜை செய்து வந்தார். இந்த அற்புத வரலாற்று நிகழ்ச்சிகளைத் திருமூலர்

வளப்பில் கயிலை வழியில் வந்தேனே
வேத ஆகமமே பிறத்தலால் மாறாத தென்திசை
அண்ணல் அருளால் அருளும் திவ்யாகமம்
விண்ணில் அமரர் தமக்கு விளங்க அரிது
எண்ணில் எழுபது கோடி நூறாயிரம்
எண்ணிலும் நீர்மேல் எழுத்தது ஆகுமே
அஞ்சனமேனி அரிவையோர் பாகத்தன்
அஞ்சொடு இருபத்து மூன்று உள ஆகமம்

ஆரியமும் தமிழும் உடனே சொல்லிக்
காரிகையார்க்கும் கருணை செய்தானே
தமிழ்ச்சொல் வடசொல் எனும் இவ்விரண்டும்
உணர்த்தும் அவனை உணரலுமாமே
நவ ஆகமம் எங்கள் நந்தி பெற்றானே
செந்தமிழாதி தெளிந்து வழிபடு நந்தி
இதனை நவம் உரைத்தானே
தத்துவஞானம் உரைத்தது தாழ்வரை

தலைநின்ற தாழ்வரை மீது தவம் செய்து
கலை நின்ற கள்வனைக் கண்டு கொண்டேனே
திருவடி வைத்து என் சிரத்து
அருள் நோக்கில் பெரு வடிவைத் தந்த பேர் நந்தி
இதயத்தும் நாட்டத்தும் என்றன் சிரத்தும்
பதிவித்த பாதப் பராபரன் நந்தி
அரியது எனக்கு இல்லை அட்டமா சித்தி
பெரிது அருள் செய்து பிறப்பு அறுத்தானே

அங்கி உதயம் வளர்க்கும் அகத்தியன்

நாடும் நகரமும் நல் திருக்கோயிலும்
தேடித்திரிந்து சிவ பெருமான் என்று பாடுமின்
மன்று தொழுத பதஞ்சலி வியாக்கிரமா்
என்று இவர் என்னோடு எண்மருமாமே
தப்பிலா மன்றில் தனிக்கூத்து கண்டபின்
சேர்ந்து இருந்தேன் சிவன் ஆவடு தண்துறை

என்ற வரிகளில் எடுத்துரைக்கின்றார்.

திருவாவடுதுறையில் சிவபூஜை செய்து வந்த ஞானமுனிவர் ஒரு நாள் வழக்கம் போல காவிரிக் கரைக்கு வந்து நீராடிப் பூஜை செய்து முடித்தார். அப் போது மாடுகள் துயரத்தால் அழும் வேதனைக் குரலைக் கேட்டார். சாத்தனூர் அந்தணர்களின் பசுமாடு களையெல்லாம் மேய்க்கும் மூலன் என்ற ஆயன் இறந்து கிடப்பதையும் அவனைச் சுற்றி நின்று மாடு கள் அவன் உடலை நக்கியும் மோந்தும் கண்ணீர் விட்டுக் கதறிக் கொண்டிருப்பதையும் கண்டார். மனித குலத்திற்கு உணவளித்து எல்லோருக்கும் பால் தரும் தாயாக இருப்பதோடு கடவுள் வழி பாட்டிற்குப் பால், தயிர், வெண்ணெய், நெய், திருநீறு என்ற ஐந்து அபிஷேகப் பொருட்களை அளிப்ப தால் அனைத்து ஜீவராசிகளிலும் உயர்ந்த மிகச் சிறந்த புனிதப் பிறவியாக விளங்கும் பசுக்களின் துயரத்தைப் போக்குவதற்கு ஞானமுனிவர் முயன்றார். மூலன் உயிர் பெற்று எழுந்தால் ஒழிய பசுக்களின் துன்பம் தீராது என்பதை உணர்ந்தார். எல்லா உயிர் களுக்கும் உயிராக விளங்கும் ஆவுடையப்பனின் திருநாமம் ஓதி நந்தி வாகனனைத் துதி செய்து தன் உயிரை ஆயன் உடலில் புகுத்தினார்.

மூலன் உடலில் புகுந்த ஞானமுனிவர் திரு மூலராக எழுந்தார். தன் உடலைப் பாதுகாப்பாக வைத்தார். ஆயன் உயிர் பெற்று எழுந்ததைக் கண்ட பசுக்கள் மகிழ்ச்சியால் துள்ளிக் குதித்தன. அள வில்லா ஆனந்தத்துடன் புல்மேய்ந்து நீர் பருகி பசியும் தாகமும் ஆறின. திருமூலர் மாடுகளையெல்லாம் நிழலில் தங்க வைத்தார். மாலையானதும் மாடுகள் வழக்கம்போல் வீடு நோக்கிச் சென்றன. திருமூலர் பின் சென்றார். பசுக்கள் எல்லாம் தத்தம் வீட்டிற்குள் புகுந்த பின்னர் திருமூலர் மீண்டு செல்லலானார். அப்போது மூலனின் மனைவி வந்து வீட்டிற்கு வரு மாறு அழைத்தாள். திருமூலர் அவளிடம் எமக்கும் உனக்கும் ஒரு தொடர்பும் இல்லை என்று கூறிவிட்டு சாத்தனூரில் இருந்த திருமடத்தில் சென்று தங்கி னார். ஆயன் மனைவி மூலனின் செயல் பற்றி ஊரா ரிடம் முறையிட்டு அவர்களை அழைத்து வந்தாள். திருமூலரைக் கண்டு பேசிய ஊரார் அவரது ஞானம் மிக்க நிலையைக் கண்டனர். ஆயனுடைய மனைவி யிடம் சென்று மூலனது ஞானம் உலக ஞானமாக இல்லை. முற்றிலும் கடவுள் ஞானமாக உள்ளது. அவன் முன்பு போல் இல்லை. முற்றும் துறந்த முனிவராய் மகாயோகியாய் உள்ளான், அவனது நிலை உன்னோடு வாழ்வதற்கு ஒத்துவராது என்று கூறி அவளை அமைதிப்படுத்தி ஆறுதல் கூறினர்.

எல்லாவற்றையும் கடந்த மெய்க்கடவுளை வணங்கி புல் பூச்சி முதல் தெய்வங்கள் வரை எல்லா ஜீவராசிகளிடமும் அன்பு காட்டும் கருணை மிக்க சைவத்திரு நெறியுள்ளரான திருமூலர் ஆயன் உடலில் புகுந்து எழுந்த அற்புத ஜீவ காருண்ய ஒழுக்கத்தினால் மாடுகளை மட்டுமன்று ஆயனின் விதவை மனைவியையும் பெருந்துயரத்திலிருந்து விடுவித்தார். கணவன் இறந்த பின்பும் சுமங்கலியாக வழக்கம் போல வாழும் சுப வாழ்வை வாழச் செய் தார்.


காவிரியாற்றங்கரைக்கு வந்த திருமூலர் தனது உடலை வைத்திருந்த இடத்திற்குச் சென்றார். அங்கு உடல் காணாததைக் கண்டு இதுவும் ஈசன் அருள் என்று உணர்ந்து திருவாவடுதுறை கோயி லுக்குச் சென்றார். திருக்கோயிலின் புனிதமரமான போதிமரத்தடியில் (அரசமரம்) அமர்ந்து சிவ பரம் பொருளைச் சிந்தை செய்து தவம் புரிந்தார். இயமம், நியமம், ஆதனம், பிராணாயாமம் பிரத்தியாகாரம், தாரணை, தியானம், சமாதி என்ற அஷ்டாங்க யோகம் செய்து ஆயிரக்கணக்கான ஆண்டுகள் அரசமரத்தடி யில் தவநிலையில் இருந்தார். நான்கு தமிழ் வேதங் களையும், ஒன்பது ஆகமங்களையும் மூவாயிரம் பாடல்களில் ஆண்டுக்கு ஒரு பாடலாக அருளிச் செய் தார். தமிழ் மூவாயிரம், மந்திரமாலை, திருமந்திரம் என்று பெயர் பெற்ற இந்த நூலோடு முன்னூறு பாடல்களைக் கொண்ட ஒரு நூலும், முப்பது பாடல் களைக் கொண்ட மற்றொரு நூலும் அருளிச் செய்தார். இவ்வாறு பல்லாயிரக் கணக்கான ஆண்டுகள் இளமை யோடு வாழ்ந்து மூலன் உடலில் புகுந்து தமிழ் வேத ஆகமங்களை அருளிச் செய்த வரலாற்று நிகழ்ச்சி களைத் திருமூலர்

நந்தி அருளாலே மூலனை நாடினோம்
பரகாயம் மேவலுமாமே
நந்தி வழிகாட்ட யான் இருந்தேனே
நந்தி நகர் புக்கு ஒன்பது கோடி யுகந்தனுள்
(நகர் - கோயில்)

ஞானப்பாலாட்டி நாதனை அர்ச்சித்து
யானும் இருந்தேன் நற்போதியின் கீழே
சேர்ந்து இருந்தேன் சிவபோதியின் நிழலில்
சேர்ந்து இருந்தேன் சிவ நாமங்கள் ஓதியே

தோன்றா நரை திரை
சாவதும் இல்லை சதகோடி நாளே
பண்டையுள் வேதம் பரந்த பரப்பெல்லாம்
இன்று சொல்நூலாய் எழுத்து உகந்தேனே

அரனடி நாள்தொறும் சிந்தை செய்து
ஆகமம் செப்பலுற்றேனே



தந்திரம் ஒன்பது சார்வு மூவாயிரம் சுந்தர
ஆகமச் சொல்
மூலன் உரை செய்த மூவாயிரம் தமிழ்
ஆணி கலங்காது அவ் ஆயிரத்து ஆண்டே
தப்பிலா மன்றில் தனிக் கூத்து கண்டபின்
ஒப்பில் எழுகோடி யுகம் இருந்தேனே
மூலன் உரை செய்த முந்நூறு மந்திரம்
மூலன் உரை செய்த முப்பது உபதேசம்

என்று எடுத்துக் கூறுகின்றார். எட்டுவகை யோகங்களையும் அவற்றின் பலன்களையும் அஷ்டமா சித்திகளையும் விளக்கிக் கூறும் திருமூலர்

யான் பெற்ற இன்பம் பெறுக இவ்வையகம்

என்ற பரந்த பொதுநல நோக்குடைய கருணைக் குணத்தினால் தான் பெற்ற இறையனுபவத்தை அரிய மகா சித்திகளை, ஆற்றல்களை எல்லோரும் உணர்ந்து இன்பம் அடைய வேண்டும் என்பதால் மூன்று நூல்களையும் ஏழு மாணவர்களுக்கு உபதேசித்தார்.

''ஒன்றவன் தானே'' என்று தொடங்கும் திருமந்திரம் என்ற ஆகம நூலையும் பிற நூலையும் மாலாங்கன், இந்திரன், சோமன், பிரமன், உருத்திரன், காலாங்கி, கஞ்சமலையன் என்ற ஏழு சீடர்களுக்கு உபதேசித்து அருளினார். இது மட்டுமன்றி காலங்கர், பாலகோரர், மாளிகைத் தேவர், நாதாந்தர், பரமானந்தர் போக தேவர் என்பவர்கள் மூலம் நாடெங்கும் திருமடங்கள் அமைத்தார். இவ்வாறு தெய்வத் தமிழ்ப் பணியும், சைவத்தின் உயிர்நாடியான ஜீவகாருண்யப் பணிகளும் தொடர்ந்து செல்லும்படி வழிசெய்த திருமூல முனிவர் மீண்டும் ஈசனைச் சென்று அடையும் சித்தம் கொண்டார். சிவநாமம் ஓதி உயிரை மேல்நோக்கிச் செலுத்தினார். எங்கும் நிறைந்த ஈசன் திருவருளால் மீண்டும் சிவலோகம் சேர்ந்து சிவ கணநாதரானார். இவற்றையெல்லாம்

யான் பெற்ற இன்பம் பெறுக இவ்வையகம்
வான் பற்றி நின்ற மறைப்பொருள் சொல்லிடின்
ஊன் பற்றி நின்ற உணர்வுறு மந்திரம்

மொழிந்தது மூவர்க்கும் நால்வருக்கும்
மந்திரம் பெற்ற வழிமுறை
மாலாங்கன் இந்திரன் சோமன் பிரமன்
உருத்திரன் சந்துருகாலாங்கி
கஞ்சமலையனோடு
இந்த எழுவரும் என் வழியாமே.

வந்த மடம் ஏழும் மன்னு சன்மார்க்கத்தின்
முந்தி உதிக்கின்ற மூலன் மடவரை
கலந்தருள் காலாங்கர் தம் பாலகோரர்
நலந்தரு மாளிகை தேவர் நாதாந்தர்
புலங்கொள் பரமானந்தர் போகதேவர்
நலம் திகழ் மூலர் நிராமயத்தோரே.

மந்திரமாலை உறைப்பொடும் கூடி நின்று
ஓதலுமாமே
நான் ஒன்றி நின்ற நாதனை நாடுவன் நானே
நானும் அழிந்தமை நான் அறியேனே


அவ யோகம் சாராது அவன் பதிபோக
நவயோக நந்தி நமக்கு அளித்தானே

என்று திருமந்திரம் கூறுகின்றது. இவ்வாறு பூமிக்கு வந்ததிலிருந்து மீண்டும் சிவலோகம் சென்று சேர்ந்தது வரை அற்புத முனிவரான திருமூலரின் தெய்வீக வரலாறு முழுவதும் திருமந்திரத்திலேயே மிக அருமையாக விளக்கப்பட்டுள்ளது.

★★★

# எங்கும் நிறைந்தவன்

- திருமதி உமா சுப்பிரமணியன்



ஆவினன்குடி குமரனிடம்
குறையை சொல்லுங்க
ஆவல்தீர அருளவரும்
அய்யன் புகழைப் பாடுங்க (ஆவினன்குடி)

காடு மேடெல்லாம் கடந்து
கால் நடையாய் நடந்து
பழனிப் பாலகனின்
பாதம் பற்றுங்கள்
நாடு செழிக்கவும், வீடு சிறக்கவும்
அருளைத் தருவான்
பாடு அவன்புகழ்; போகும் வழியெல்லாம்
தெளிவைத் தருவான் (ஆவினன்குடி)

சின்னப் பிள்ளைகளும் நடக்குது
சிங்காரமாக இருக்குது
வண்ணக் காவடிகள் வருகுது
பக்தியில் மனம் உருகுது
என்னென்பேன் ஏதென்பேன்
எல்லாம் நீயென்பேன் – முருகா
ஊனென்பேன் உணர்வென்பேன்
உணர்த்துவது நீயென்பேன் – வேலா
(ஆவினன்குடி)

ஏற்றமும், இறக்கமும்
மாற்றுவதும் நீயென்பேன் – கந்தா

பூவென்பேன் வாசமென்பேன்
பூக்கச் செய்வது நீயென்பேன் – கடம்பா
ஏடென்பேன் கோலென்பேன்
எழுத்தெல்லாம் நீயென்பேன்

ஊற்றென்பேன் காற்றென்பேன்
உலகமே நீயென்பேன்
பாட்டென்பேன் தாளமென்பேன்
படைப்பெல்லாம் உனதென்பேன்
நானென்றும் எனதென்றும்
நவின்றிட ஒன்றுமில்லை
நாள்தோறும் உன்னைவணங்க
நலங்கள் குறைவதில்லை (ஆவினன்குடி)

* * *

# குன்றத்தூர் அருள்மிகு ஸ்ரீ சுப்பிரமணிய சுவாமி திருக்கோயில்

- திருமதி இராஜேஸ்வரி விஸ்வநாதன்

வேதம் புகழும் வலஞ்சுழி விநாயகர்
பாதம் முதலில் பாங்காய் தொழுது
ஞாலம் புகழும் ஞானவேல் முருகன்
வேலன் இருக்கும் குன்றைத் தொழுவோம்

குன்றுகள் இருக்கும் இடமெல்லாம் குடியிருக்கும் முருகன் குன்றத்தூரில் இருப்பதில் வியப்பென்ன இருக்கிறது? இங்கே வள்ளி தெய்வானையுடன் முருகன் வடதிசை நோக்கி நின்ற கோலமாய் பக்தர்களுக்கு காட்சியளித்து வருகிறார். குன்றத்திலே குமரனுக்கு என்றென்றும் கொண்டாட்டம். அவனைக் காண வருகின்ற பக்தர்களுக்கோ என்றுமே வராது திண்டாட்டம். பாம்பன் சுவாமிகளுக்கு தான் இருக்குமிடம் காட்டிய பாலசுப்பிரமணியன், ஔவைக்கு சுட்டக்கனி கொடுத்து சுட்டிக்காட்டிய வேலவன் இங்கு பக்தர்களுக்கு அருள்புரிகிறான். ஆனந்தம் கூட்டுகிறான். அவர்களின் பெயர்புகழை நிலை நாட்டுகிறான்.

குன்றத்தூர் முருகனிடம் செல்வதற்கு சில படிகள் ஏறவேண்டும். வடிவேலன் திருப்படிகளைக் கடப்பவர்களுக்கு தங்கள் வாழ்க்கைப் படிகள் கடப்பது எளிதாகிறது. கோயில் வெளிப்புற படிக்கட்டின் வழியில் வலதுபுற கீழ்ப்பக்கத்தில் வலஞ்சுழி விநாயகர் சன்னதி, கிழக்கு நோக்கி அமைந்துள்ளது. முருகனை வணங்குமுன் விநாயகரை வணங்கி பின் மீதிப்படிகள் கடக்க வேண்டும். இத்திருக்கோயிலில் கும்பாபிஷேகம் செய்ய வேண்டி திருப்பணிகள் நடப்பதால் விநாயகர் ஆலயம் நவக்கிரஹங்கள் எல்லாம் பாலாலயம் செய்யப்பட்டிருக்கிறது.

இத்திருக்கோயிலின் முகப்பு அமைப்பு மிகவும் சிறப்பாக இருக்கிறது. இருபுறமும் நல்ல உயர்ந்த மரங்கள் நிற்க குன்றின் மேலே குமரன் இருக்கிறான். காண்பவர் மனத்தையும் கண்களையும் கவரும் அளவுக்கு வண்ணமிகு காட்சி. இயற்கை அழகே அழகல்லவா! திரு.வி.க. கூறிய கூற்று ''அழகே முருகு முருகே அழகு'' நம் நினைவில் நிற்கிறது. விசாக நட்சத்திரத்தில் சரவணப் பொய்கையில் ஈசனின் நெற்றிக்கண்ணிலிருந்து தெறித்த, அக்கினிப்பிழம்பிலிருந்து உதித்த அக்கினிக்குஞ்சு முருகன் ஆவான். குன்றை ஒட்டிய பகுதியில் மக்கள் வசிப்பதால் இவ்வூர் குன்றத்தூர் என அழைக்கப்படுகிறது.

திருக்கோயிலின் அடிவாரத்தில் பதினாறுகால் மண்டபமும், அதை அடுத்து 74 (எழுபத்து நான்கு) அகன்ற படிக்கட்டுகளும், திருக்கோயிலின் ராஜகோபுர வாயிலில் ஆறு படிக்கட்டுகளும் அமைந்துள்ளன. திருக்கோயிலின் பின்புற அடிவாரத்தில் திருக்கோயில் குளமான சரவணப் பொய்கை அமைந்துள்ளது.

இத்திருக்கோயிலின் ராஜகோபுரம் வடக்கு நோக்கி உள்ளது. வாயிலைக் கடந்து உள்ளே சென்றதும் நம் கண்களைக் கவரும் ''கூடி கும்பிட்டால் நாடி வந்து நல்வாழ்வு தருபவன் குன்றத்தூர் குமரன்'' என்று உத்திரவாதம் தரும் வாசகங்களும், ''குன்றத்தூர் முருகனை வழிபட்டு குறைவிலாச் செல்வம் பெற்றிடுங்கள்'' என்கிற வாழ்த்துரையும் நம் மனத்தை ஈர்க்கும். எல்லா திருத்தலங்களிலும் இருப்பதுபோல் எதிரே கொடிமரமும் துவஜஸ்தம்பமும் அமைந்துள்ளன. இடது புறத்தில் நவக்கிரக சன்னதி உள்ளது. கொடிமரத்தை வணங்கிய பின் நவக்கிரகத்தைச் சுற்றி வரவேண்டும். திருக்கோயிலின் வெளிப் பிரகாரச் சுற்றில் தீர்த்தக் கிணறு ஒன்று உள்ளது. வேம்பு அரசு மேடையுடன் கூடிய ஸ்ரீ நாகலிங்கேசுவரர் சன்னதி உள்ளது. இவ்விடத்தில் வேண்டிக் கொண்டு கல்லைத் துணியில் கட்டி, பிரார்த்தனை முடிந்த பிறகு கட்டிய கல்லை அவிழ்த்து திருக்கோயிலுக்குக் காணிக்கை செலுத்திவிட்டுச் செல்கிறார்கள். இங்குள்ள இந்த வேப்பமரமும், அரசமரமும் பின்னிப் பிணைந்து இணைந்து வானளாவி வளர்ந்து இருக்கின்றன. இங்கே பக்தர்கள் வீடுகட்ட வேண்டும் என்று வேண்டிக் கொண்டு கற்களைக் கட்டுகிறார்களா அல்லது குடும்பம் கூடிவர வேண்டும் என்று கட்டுகிறார்களா அல்லது மேன்மேலும் உயர வரவேண்டும் என்று செய்கிறார்களா தெரியவில்லை. வேண்டிக் கொள்வது மிக ரகசியமாக இருக்க வேண்டுமாம். இந்த மரத்தின் கிளைகளில் கட்டும் கயிறுகளால் பக்தர்களின் வாழ்வுப்பயிர் வளர்ந்து நன்றாக செழிக்கின்றது. நினைத்த காரியம் கைகூடி வருகிறது. அது மட்டுமா? சுற்றி வரும்போது

ஆலயத்தின் முன்பகுதியில் வில்வமரமேடையுடன் ஸ்ரீ காளிங்கநர்த்தன கிருஷ்ணர் சன்னதி, தல விருட்சம் வில்வ மரங்கள் ஆகியவை அமைந்துள்ளன. இந்த வில்வமரங்களிலும் பக்தர்கள் வேண்டிக் கொண்டுக் கற்களைக் கட்டுகிறார்கள். இதனால் தீராத நோயெல் லாம் தீர்கின்றன. நாம் சுகாதாரமாக உயிர்வாழ இந்த சுகந்தக் காற்று இதுபோன்ற மரத்தடிகளால் தானே கிடைக்கும். இங்கே விஞ்ஞானமும், மெய்ஞ்ஞான மும் கூட்டு சேர்ந்து வரும் பக்தர்களுக்கு அருளை யும் ஆரோக்கியத்தையும் கொட்டிக் கொடுக்கிறது என்றால் மிகையாகாது.

திருக்கோயிலின் கிழக்குப்புற வாயிலின் வழி யாக உள்ளே நுழைந்தால் அங்குள்ள மகாமண்டபத் தின் வலப்புறத்தில் பைரவர் சன்னதி, எதிரே வரசித்தி விநாயகர் சன்னதி, காசிவிசாலாட்சி உட னுறை விசுவநாதர் சன்னதியும், கருவறைக் கட வுளைப் பார்த்த நோக்கில் ஆலயமணியுடன் அழகிய மயில் சன்னதியும் உள்ளது.

மஹா மண்டபத்தை அடுத்துள்ள அர்த்த மண்டபத்தில், இருபக்கமும் துவார பாலகர்கள் காவல் காக்கின்றனர். கருவறையில் வள்ளி தெய்வானையுடன் சுப்பிரமணியர் சுந்தரக் கோலத்தில் காட்சி தருகிறார். வலப்புறத்தில் உற்சவர் சன்னதி உள்ளது.

அர்த்த மண்டபத்தைக் கடந்து உட்பிரகாரத் தைச் சுற்றி வரும்போது அங்கு துவார கணபதி, ஸ்ரீதட்சிணாமூர்த்தி, அருள்மிகு துர்க்கையம்மன், ஸ்ரீ சுப்ரமணியர் ஆகியோர் கோஷ்டத்தில் அமைந்து திருக்கோயிலின் உள்பிரகார அமைப் புக்கு மேலும் பெருமை சேர்க்கின்றனர்.

''ஆதி முதலாகி ஆனந்த வடிவாகி
நாத ஒலியாகி நம்பிக்கைப் பொருளாகி
வேதம் புகழும் வலஞ்சுழி விநாயகர்
வழியில் அமர்ந்து நல்லாசி நல்க''

''பதியெங்கிலும் இருந்து விளையாடிப்
பலகுன்றிலும் அமர்ந்த பெருமான்''

திருக்கூவம் என்னும் ஊரில் தங்கி இருந்த ''தாரகன்'' என்னும் அரக்கனுடன், திருப்போரூரில் போர் புரிந்து, அவ்வரக்கனை அழித்து தேவர்களுக்கு, முருகன் வள்ளி, தெய்வானையுடன் திருத்தணியில் காட்சி தந்தார் என்பது வரலாறு. அப்படி அழித்து வெற்றிபெற்ற வேலன் திருத்தணி செல்லும் வழியில் குன்றத்தூரில், குன்றில் ஒரு முகூர்த்த நேரம் அதாவது மூன்றே முக்கால் நாழிகை தன் கால்பதித்து நின்றதால் இத்தலம் ஆதித்தலம் என்றும் பிராணத்தலம் என்றும் வடதிசை நோக்கி நின்று காட்சி தந்ததால் தென்தணிகை என்றும் சிறப்பித்து அழைக்கப்படுகிறது. திருத்தணி யின் ஆதித்தலமாக இருப்பதாலும், ''வேல்மாறல்'' மந்திரம் இங்கு ஓதப்படுவதாலும் இத்தலத்தில் பூசிப்பவர்கள் அனைத்துப் பலனையும் அடைய லாம் என்பது சான்றோர் கூற்று.

''விழிக்குத் துணை திருமென்மலர்ப் பாதங்கள்
மெய்மை குன்றா
மொழிக்குத்துணை முருகா எனும் நாமங்கள்
முன்பு செய்த
பழிக்குத்துணை அவன் பன்னிரு தோளும்
பயந்ததனி
வழிக்குத்துணை வடிவேலும் செங்கோடன்
மயூரமுமே'' - (கந்தர் அலங்காரம்)

இந்த வேல்மாறல் மந்திரத்தால் நம்விதி மாறும். நல்கதிக்கிட்டும்.

சுமார் 800 (எண்ணூறு) ஆண்டுகளுக்கு முன்பே இத்திருக்கோயில் இருந்திருக்க வேண்டும் எனக் கருத முடிகிறது. கி.பி. 1706 முதல் 1732 வரை, மதுரை நாயக்கர்களில் ஒருவராக அரசையாண்ட ''சொக்கர் பூபா'' என்பவர் இத்திருக்கோயிலில் பல திருப் பணிகள் செய்துள்ளார். இத்திருக்கோயிலில் உள்ள ஒரு கல்வெட்டிலிருந்து இரண்டாம் குலோத்துங்கச் சோழ மன்னர் காலத்தில் கட்டப்பட்ட இக்கோயில் கி.பி. 1720 ஆம் ஆண்டு மதுரை நாயக்கர் காலத்தில் திருப்பணி செய்யப்பட்டிருக்க வேண்டும் என வரலாற்று ஆய்வாளர்கள் கருதுகின்றனர்.

குன்றின் மீது முருகன் இருப்பதால், குன்றை எல்லையாகக் கொண்ட கோயிலில் முருகன் துணைவியருடன் காட்சி தந்ததால் இவ்வூரை குன்றத்தூர் என்று அழைக்கின்றனர்.

இத்திருக்கோயிலின் கருவறை அமைப்பு மிகவும் சிறப்பானது. கருவறையில் ஒன்றாக மூவரும் காட்சிக்கு அமர்ந்த போதும் ஒரு சேர மூவரையும் தரிசிக்க இயலாது. ஒருபுறம் நின்று பார்க்கும்போது வள்ளியுடனும், மறுபுறம் நின்று பார்க்கும் போது தெய்வானையுடனும் காணலாம். எதிரே நின்று பார்த் தால் முருகன் மட்டும் முழுமையாக பார்ப்பதற்கு மிகவும் அதிசயிக்கத் தக்க வகையில் காட்சி அளிக் கிறார்கள். இப்படிக் காட்சியளிப்பது இத்தலத்திற்கு மேலும் சிறப்பு சேர்க்கிறது.

இக்கோயிலின் தலவிருட்சம் வில்வமரம். தீர்த்தம் சரவணப் பொய்கை. இத்திருக்கோயிலின் காசி விசுவநாதர் சன்னதிக்கென்று தனி வரலாறு உள்ளது. குன்றத்தூர் காடாக இருந்தபோது பசு ஒன்று தினமும் சிவலிங்கத்தின் மீது பாலைப் பொழிந்து வந்ததாகவும் பசுவின் சொந்தக்காரர் பால் சொரிந்த இடத்தினைத் தோண்டி பார்க்கும்போது காசி விஸ்வநாதர் வெளிப்பட்டதாகவும் அவரை எடுத்து ஊரார் பிரதிஷ்டை செய்ததாகவும் தனி வரலாறு இருக்கிறது.

குன்றத்தூர் குமரன் மீது அருணகிரிநாதர் மூன்று பாடல்கள் பாடியுள்ளார். அவை ''அழகெறிந்த'' ''நேசாசாரா'', ''கடினதட'' என்று தொடங்கும் திருப் புகழ்களாகும்.

"வனமிகுந்த குன்றநகர் புரந்து துங்க
மலை விளங்க வந்த பெருமானை''
''வானா டேழ்நாடும்புகழ் பெற்றிடு
தேனா ரேசூழ் துங்கம வைப்பதி
மாயூர ாவாழ் குன்றைத ழைத்தருள் பெருமாளே''
''கணபதிசிறந்து வாழ்தட
வயலி நகர் குன்ற மாநகர் உறைவோனே''

என்னும் வரிகளிலிருந்து அருணகிரிநாதர் போற்றிய குன்றத்தூர் முருகனின் பெருமையும் ஊரின் பெருமை யும் நன்றாக விளங்குகின்றதன்றோ!

இத்திருக்கோயில் தினந்தோறும் காலை 6.30 மணி முதல் பிற்பகல் 12.30 மணிவரையும், மாலை 3.30 மணி முதல் இரவு 8.00 மணிவரையும் திறந்திருக் கிறது. விசேட நாட்களில் காலை 5 மணி முதல் இரவு 9 மணி வரை திறந்திருக்கும்.

ஆங்கிலப் புத்தாண்டு தினத்தன்று டிசம்பர் 31 இரவு 9 மணி முதல் அடுத்த நாள் சனவரி 1 ஆம் தேதி இரவு 8 மணி வரை திறந்திருக்கும்.

தமிழ் வருடப்பிறப்பு, சித்திரை மாத சஷ்டி, வைகாசி விசாகம், ஆடிக்கிருத்திகை, ஐப்பசி மகா கந்தசஷ்டி, சுவாமி திருக்கல்யாணம், திருக் கார்த்திகை தீபம், ஆங்கிலப் புத்தாண்டு (ஜனவரி - 1) தைப் பொங்கல் (காணும் பொங்கல்), தைப்பூசம், தைக்கிருத்திகை (தீபத்திருவிழா) பங்குனி உத்திரம் மற்றும் மாதாந்திர கிருத்திகைகள், வார செவ்வாய், வெள்ளிக் கிழமைகள் ஆகிய இச்சிறப்பு நாட்களில் முருகப் பெருமானுக்கு அபிஷேகம், விபூதி விசேட அலங்காரம், தீபாராதனைகள் நடைபெறுகின்றன. முருகனுக்கு சந்தனக்காப்புடன் கூடிய சிறப்பு அலங் காரம் நடைபெறும்.

மகா கந்தசஷ்டியின் போது ஆறுநாட்களும்



தினசரி சிறப்பு பூசைகள், உற்சவர் புறப்பாடு தமிழ் இலட்சார்ச்சனை என்று சிறப்பாக நடைபெறுகிறது. ஏழாவது நாளும், எட்டாவது நாளும் சுவாமி திருக் கல்யாணம் நடைபெறும்.

திருக்கார்த்திகை தீபத்தன்று மாலை, திருக் கோயில் வலப்புறத்தில் உள்ள குன்றில் இருக்கும் தீபத்தூணின் மீது, வான வேடிக்கைகளுடன் இரும்பு அகண்டம் எடுத்துச் சென்று அகண்ட தீபம் ஏற்றப் படும். இக்கோயிலிலிருந்து தீபம் எடுத்துச் சென்று குன்றின் மீது உள்ள கம்பத்தின் மேல் தீபம் ஏற்றுகிறார்கள். இங்கே தீபம் ஏற்றிய பின்னரே அந்த சுற்று வட்டாரத்தில் உள்ள வீடுகளில் விளக் கேற்றுகிறார்கள். தீபத்திருவிழா இங்கே சிறப்பாக நடைபெறுகிறது. அச்சமயம் ஏராளமான பக்தர்கள் தீபதரிசனம் செய்வது கண்கொள்ளாக் காட்சியாக அமைகிறது.

இத்திருக்கோயிலின் நிர்வாகம் இந்து சமய அறநிலையத் துறையினரால் மிகவும் சிறப்பாக நடத்தப்பட்டு வருகிறது. இத்திருக்கோயில் நிர்வாகம் இக்கோயிலுக்குக் கீழே மிக அருகில் உள்ள ஊரகப் பெருமாள் கோயிலையும், ஸ்ரீகந்தழீசுவரர் கோயிலை யும் பராமரித்து வருகிறது.

தமிழுக்கு முருகன், தமிழனுக்கு முருகன், அழகன் முருகன், நம் தமிழ் முதற் கடவுளன்றோ! அன்று முதல் இன்று வரை நம்மைக் காக்க, நம் மொழி காக்க ஓடி வருவான் முருகன்.

முருகனைச் சரணடைந்தால் உலகம் முழுவதும்
உளதாகும்
முருகனைச் சரணடைந்தால் உலகம் முழுவதும்
உனதாகும்.

★ ★ ★

# பரம பாகவத ஸ்ரீ வேங்கடாத்ரி ஸ்வாமிகள்

- திருமதி இந்திரா ஆரா அமுதன், திருவரங்கம்

பகவான் கிருஷ்ணனுடைய தோழனாக இருந்தும் கூட, குசேலருக்கு 'உஞ்சவிருத்தி' செய்து தான் ஜீவனம் பண்ணவேண்டிய நிலை இருந்தது. அதாவது, யாரையும் ஒன்றும் கேட்காமல், காட்டில் உதிர்ந்துகிடக்கும் தானியங்களைப் பொறுக்கி எடுத்து வந்து, அவைகளை நகத்தால் கீறி அன்றைய தினமே செலவழித்துவிட வேண்டும் என்கிற மரபை அவர் கடைப்பிடித்து வந்தார். இதைத்தான் உண்மையான ''உஞ்சவிருத்தி'' என்று பெரியோர் பகர்வர்.

இன்னொருவகையான 'கபோல விருத்தி' யானது, கிடைத்ததில் செலவழித்தது போக மிச்சத்தை நாளைக்கு என்று சேர்த்து வைத்துக் கொள்வது, இதற்கு உதாரணமாகப் புறாவைச் சொல்வார்கள்.

''அஜகரவிருத்தி'' என்ற வகைக்கு மலைப் பாம்பை உதாரணமாகக் கூறுவதுண்டு. இரையைத் தேடிப் பிடித்து உண்பதற்காக மலைப்பாம்பு முழு நாளும் இடம் விட்டு இடம் நகராது வாயை மட்டும் திறந்தபடி இருந்த இடத்திலேயே இருக்கும். எப்போது எது வந்து அதன் வாயில் மாட்டிக்கொள்கிறதோ அதை அப்படியே விழுங்கி (முழுங்கிவிட்டு) அசையாமல் இருக்கும். இதைப்போல தன் இருப்பிடம் வந்து யாராவது உணவு கொடுத்தால் உண்பது என்பது பட்டினத்தாரின் கொள்கை.

கூரம் என்கிற ஊரில் இருந்த செல்வத்தையெல்லாம் ஒரு நொடியில் உதறித் தள்ளிவிட்டு ஸ்ரீரங்கத்தில் குடியேறி இவ்வாறு ஒரு மாறுபட்ட வாழ்க்கையை வாழ்ந்த கூரத்தாழ்வானும் உஞ்சவிருத்தி செய்து வாழ்ந்தார் என்றாலும் அதிலும் ஒரு நெறியைக் கடைப்பிடித்து வந்தார். அதாவது எண்ணி 5 வீடுகளுக்குத்தான் போவார். எது கிடைக்கிறதோ அதை மட்டும் மறுநாளைக்கு என்று சேமித்து வைக்காமல் செலவழித்து விடுவார். அப்படி ஒன்றும் கிடைக்கவில்லையென்றால் அன்றைய தினம் அவருக்குப் பட்டினி நாள்.

ஒரு நாள் அடைமழை காரணமாக அவரால் உஞ்சவிருத்திக்குச் செல்ல முடியவில்லை. அதனால் அவருக்கு கட்டாய உபவாச நாளாக அன்று அமைந்தது. இரவும் வந்தது. அரங்கனின் அரவணை மணியோசையைக் கேட்ட அவரது தர்மபத்னியான ஆண்டாள் ''உன்னுடைய பக்தன் இவ்வாறு நாள் பூரா பட்டினி கிடக்க, நீ மட்டும் வேளா வேளைக்கு அமுது செய்கிறாயே, இது நியாயமா?'' என்று கேட்டாள். அவளது விண்ணப்பத்தைக் கேட்ட அரங்கன் உத்தம நம்பிகள் மூலம் பிரசாதங்களை அனுப்ப, அதை அவர்கள் உண்டபின் பராசரபட்டர், வேதவியாசபட்டர் என்கிற இரண்டு திருக்குமாரர்கள் பிறந்தனர் என்பது தனிக்கதை. ஆக கூரத்தாழ்வான் அன்று அநுசரித்தது ''அஜகரவிருத்தி'' என்பதும் பகவானின் பிரசாதம் அவரைத் தேடி வந்தது என்பதையும் நாம் தெரிந்து கொள்ள முடிகிறது.

காஞ்சி வரதனுக்கு ஆலவட்ட கைங்கர்யம் செய்தார் திருக்கச்சி நம்பிகள். திருவேங்கடமுடையானுக்கு அனந்தாழ்வான் புஷ்பகைங்கர்யம் செய்தார். உடையவர் என்கிற ராமாநுஜர் ஸ்ரீரங்கம் கோயில் நிர்வாகத்தை நெறிப்படுத்தினார் என்பது எல்லாரும் அறிந்த விஷயம்.

உஞ்சவிருத்தி செய்தே மூன்று திவ்ய தேச பெருமாளுக்கும் திரு ஆபரணங்களைச் சாற்றி மகிழ்ந்த ஒரு மகா புருஷரைப் பற்றி நாம் தெரிந்து கொள்ள வேண்டாமா?

அப்படிப்பட்ட ஆபரண கைங்கர்யம் செய்தவர் தான் பரமபாகவத ஆசார்யரான ஸ்ரீ வேங்கடாத்ரி ஸ்வாமிகள் ஆவார். இவர் காஞ்சி செய்யாற்றங்கரையில் உள்ள அரசாணிப்பாலையில் கி.பி. 1590ல் பிறந்தார். தர்க்கம், வியாகரணம், மீமாம்ஸை போன்ற எல்லாத்துறைகளிலும் சிறந்து விளங்கிய கவி ஆவார்.

இவர் சன்னியாசியாக இருந்த காரணத்தினாலோ என்னமோ பகவானுக்கே திரு ஆபரணங்கள் செய்து அணிவித்து பார்த்து மகிழ ஆசைப்பட்டார். அதுவும் உஞ்சவிருத்தி செய்தே இத்தனை திரு ஆபரணங்களைச் செய்தார் என்றால் அவருடைய மகத்துவத்துக்கு ஈடு இணை உண்டா என்று நம்மை வியக்கவைக்கிறது.

திருவேங்கட முடையானுக்கு கிரீடம் சமர்ப்பித்திருக்கிறார். அதே போல் காஞ்சி வரதனுக்கும் உபய நாச்சிமார்களுக்கும் கொண்டை (கிரீடம்) சமர்ப்பித்திருக்கிறார். வரதன் கண்டருளும் உத்ஸவங்கள், பிரம்மோத்ஸவம் முதல் தினத்தில் ''வேங்கடாத்ரி கொண்டை''யை அணிந்துதான் உத்ஸவ தொடக்கம் ஆகும் என்கிற வழக்கம் இன்றும் காஞ்சியில் கடைப்பிடிக்கப்பட்டு வருகிறது. பெருமாளும் இரு உபய நாச்சியார்களும் அவர் செய்த கொண்டையை அணிந்து பெருமிதத்துடன் உலா வருவது, பாக்ய சாலிகளுக்கு மட்டுமே கிடைக்கும் அற்புதக் காட்சி என்பதை யாரும் மறுக்கமுடியாது.

காஞ்சியில் பிறந்தாலும் பூலோக வைகுண்ட நாதனான அரங்கனான நம் பெருமாளுக்கு அவர் அணிவித்த நகைகளின் விபரத்தைப் படித்தால் இத்தனை ஆபரணங்களையும் செய்ய எத்தனை காலம் ஆனதோ, உஞ்சவிருத்தி செய்தே இதைச் செய்வதற்கான பணத்தை சேமிக்க என்னவெல்லாம் கஷ்டப்பட்டாரோ என்று நினைத்தால் அவருடைய உன்னத காரியம் எப்படிப்பட்ட மகிமை பொருந்தியது என்பதை யாராலும் உரைக்கவே இயலாது.

கல்கள் இழைத்த பாண்டியன் கொண்டை (இதை நீல்முடி என்றும் சொல்வர்), உபய நாச்சியார்களுக்கும், கல் இழைத்த இரண்டு கிரீடங்கள், முத்து மாலைகள், மகர கண்டி பதக்கம், பெரிய பிராட்டியான ரங்கனாயகித் தாயாருக்கும் ராஜமுடி இவைகளை செய்து தந்திருக்கிறார். மேலும் சிகப்புக்கல் மாங்காய் மாலை, அபய ஸ்ரீஸ்தம் என்றும் பட்டியல் நீண்டு போகும்.

இவருடைய திருவரசு ஆளவந்தார் படித் துறைக்கு பக்கத்தில் இருக்கிறது. இவருடைய தீர்த்த தினமாக ஒவ்வொரு வருட மாசி மாத கிருஷ்ண ஸப்தமி தினத்தில் அவருடைய சிஷ்யர்கள் ஆந்திராவி லிருந்து பெருமளவில் வருவார்கள். அவருடைய திரு உருவப் படத்தை ஸ்ரீரங்கம் கோயில் யானையாகிய ஆண்டாளின் மேல் வைத்து பஜனை செய்தபடியே நாலு வீதிகளும் வலம் வந்து அவருடைய பிருந்தாவனத்துக்கு சென்று அஞ்சலி செய்வார்கள். அவருடைய தீர்த்த தினமான அன்று ரங்கநாதர் அவர் செய்த எல்லா திரு ஆபரணங்களையும் அணிந்து கோலாகலமாக பக்தர்களுக்குக் காட்சி தருவார். இந்த வருடம் அவருடைய தீர்த்த தினம் மாசி 11ம் தேதி (23.2.03) அன்று வருகிறது.

காஞ்சி கோயிலில் அவர் வசித்து வந்த அறையின் முகப்பில் அவருடைய பெயர் இருப்பதை இன்றைக்கும் நாம் காணலாம்.

இவருக்கு தூப்புல் ஸ்ரீ வேதாந்த தேசிகரிடம் மிகுந்த ஈடுபாடு உண்டு. அவரை மானசீக குருவாக ஏற்றுக்கொண்ட இவர் அவர் செய்த பாதுகா ஸஹஸ்ரத் துக்கு இணையாக தானும் ஒரு ஸஹஸ்ரத்தை லட்சுமி யின் பேரில் வடிக்க ஆசைப்பட்டார். காஞ்சி மண் ணுக்கே உள்ள மகத்துவமோ என்னமோ!

அதனால் 1018 ஸ்லோகங்கள் கொண்ட 25 ஸ்தபகமாக லட்சுமி ஸஹஸ்ரத்தை இயற்றினார். முதல் ஸ்தபகத்தில் முதலில் பெருமாள், பிராட்டி, ஆதிகவி வால்மீகி, பராசரர், நாதமுனி இவர் களைத் துதித்துவிட்டு தன் ஆசார்யரான தேசிகரை யும் வந்தனை செய்து தொடருகிறார். தேவியின் சாத்வீகத்தன்மை, அவள் காணும் உத்ஸவங்கள் நான்முகன் நான்கு முகங்களாலும் தேவியைத் துதிப் பதைக் கூறுகிறார். ஒவ்வொரு செய்யுளிலும் ஒரு அக்ஷரம், 2 அக்ஷரம் என்ற அமைப்பிலும், ஒரு வார்த்தையைத் திருப்பிப்போட்டாலும் அதே வார்த்தை வரக்கூடிய அமைப்பிலும், பலவகை யாக அமைத்த இந்த லட்சுமி ஸஹஸ்ரத்தை சம்ஸ் கிருத ஞானத்துடன் படித்தால் அவர் அமைத்த அழகை வெகுவாக ரசிக்கலாம்.

**சந்தையில் கூட்டம்**

தந்தை தாய் தமர்
தாரம் மகவு என்னும்
இவை எல்லாம்
சந்தையில் கூட்டம்
இதிலோ சந்தேகம் இல்லை

**- தாயுமானவர்**

இவர் உடல் உபாதையினால் (சிலர் கண் உபாதை என்பர்) நலிவுற்றபோது, இந்த லட்சுமி ஸஹஸ்ரத்தை இயற்றி அந்த உபாதையிலிருந்து விடுபட்டதாகக் கூறுவர். யார் ஒருவர் லட்சுமியின் ஆயிரம் நாமாக்களைப் பக்தியுடன் சொல்கிறார்களோ அவர்களை யாக்ஞவல்கியருக்கு இணையாக வேத விற்பன்னர்கள் கொண்டாடுகிறார்கள் என்பதை அறிந்த இவர் லட்சுமியின் கடாக்ஷம் எல்லாருக்கும் எளிதில் கிடைக்கக்கூடிய விதத்தில் ஒரு அற்புத காவியத்தை படைத்து நமக்கு அளித்திருப்பதற்கு நாம் என்றென்றும் கடமைப்பட்டவர்களாக இருக்க வேண்டும். தவிர, உலகிலுள்ள நன்மை தீமைகளை இரு கந்தர்வர்கள் வாயிலாக வெகு சமத்காரமாக வெளியிடுகிற ''விச்வகுணாதர்ச சம்பு'' என்ற பெருங் காவியத்தையும் இயற்றியிருக்கிறார். இருந்தும் லட்சுமி ஸஹஸ்ரத்தைதான் ஸ்ரீரங்கத்தில் உள்ள பெண்மணி கள் பாராயணம் செய்து பிரபலப்படுத்துகிறார்கள்.

தனக்காகவோ, அல்லது தன் குடும்பத்துக் காகவோ வாழாமல் பெருமானுக்கு நகைகள் செய் வதற்காக தன்னையே அர்ப்பணித்துக் கொண்டு ''உஞ்ச விருத்தி'' சேவையை ஒரு உன்னத சேவையாக செய்து அதன் அருமை பெருமைகளை நாமெல்லோரும் உணரும் படியாக வாழ்ந்து மறைந்த அந்த மாமனித ரின் தீர்த்த தினம் இந்த வருடம் பிப்ரவரி மாதம் 23-ந் தேதி அன்று வருகிறது. அவருடைய சிஷ்யர்களுடன் நாமும் ஏராளமாக கலந்துகொண்டு பஜனை செய்து, அரங்கன் அணிந்து காட்சி கொடுக்கும் நகைகளுடன் ஜொலிக்கும் பெருமாளையும் சேவித்து அவரின் அடி யாருக்கு நம் அஞ்சலியைச் செலுத்தி கிருதக்ஞர் களாக ஆவோமாக!

***

# செந்தமிழ்வாரிதி டாக்டர் இரா. செல்வகணபதி அவர்கள் வழங்கியுள்ள ''திருவாசகம் அருளிச்செய்த மாணிக்கவாசகர்'' – ஒலிப்பேழை – மதிப்புரை.

– அ. நிறைமதி, பி.எல்.

''உங்கள் செவிகளில் இலைபோட்டுக்
காத்திருங்கள்; இயலும் இசையுமாய்
ஒரு தமிழ் விருந்து உங்களுக்காக''

என்ற முன்னுரை இவ்வொலிப் பேழைக்கு மிகப் பொருத்தமாக அமைந்து விளங்குகின்றது.

பழுத்த தமிழ்ப்புலமையால் தமிழ்ப் பேரறிஞர்களின் விழிப்புருவங்களை வில்லாக்க வல்லவரான செந்தமிழ்ச் செல்வர் டாக்டர் செல்வகணபதி அவர்கள், மரபுமாறாத மங்கலத் தமிழில் உரையாற்றி இம் ''மாணிக்கவாசகர்'' ஒலிப்பேழையைத் தமிழ் மக்கள் அனைவரும் கேட்டு உணர்ந்து உய்வுபெறும் வகையில், பைந்தமிழுக்கும் நம் சைவ சமயத்திற்கும் மகுடம் சூட்டும் வகையில் அரிய கருவூலமாகப் படைத்து இருப்பது மகத்தான தொண்டு என்று நாம் போற்றிக்கூறக் கடமைப்பட்டுள்ளோம்.

ஊழிக் காலத்தில் உலகமெலாம் ஒடுங்கிய வேளையில் தம் தனிமையைக் கழிப்பது எவ்வாறு எனக் கவலை கொண்ட கண்ணுதல் இறைவர், திருவாசகத்தை மாணிக்கவாசகர் சொல்ல சொல்ல தாமே முதியவராக வந்து படி எடுத்துவைத்துக் கொண்டார் என்று செந்தமிழ் வாரிதி முனைவர் இரா. செல்வகணபதி அவர்கள்.

''கடையூழி வருந்தனிமை கழிக்க அன்றோ
அம்பலத்துள் உடையான் உன்வாசகத்தில் ஒரு
பிரதிகருதியதே''

என்ற மனோன்மணியம் சுந்தரம்பிள்ளையவர்களின் பாடல் வரிகளையும், ''திருவாசகம் இங்கு ஒருகால் ஓதின்'' எனத் தொடங்கும் சிவப்பிரகாசரின் பாடல் வரிகளையும், ''வான்கலந்த மாணிக்க வாசக'' என்ற அருட்பிரகாச இராமலிங்க சுவாமிகளின் போற்றுதல்களையும் நன்கு விளக்கி ''திருவாசகம் அருள் அனுபவநூல்'' என்பதைத் தெளிவுபடுத்தியுள்ளார்கள்.

திருவாசகத்தைக் கேட்டால்தான் கருங்கல் மனமும் கரைந்து உகும்; தொடுமணற் கேணியிற் சுரந்துநீர் பாயும் என்று சிவப்பிரகாச சுவாமிகள் போற்றிப் பாடியிருக்கின்றார்கள். திருவாசகம் அருளியுள்ள ''அழுதுஅடி அடைந்த அன்பர்'' நம் மாணிக்கவாசகர் அருள் வரலாற்றினைக் கேட்டாலும் ''தொடுமணற் கேணியிற் சுரந்து நீர்பாயும்'' என்று கூறும் வகையில் ''செந்தமிழ் வாரிதி'' ''சிவஞானச் செல்வர்'' முனைவர் இரா. செல்வகணபதி அவர்கள் எத்தனை உருக்கத்துடன் இவ்வொலிப்பேழையை உருவாக்கியுள்ளார் என்பதை இதனைக் கேட்பவர்கள் நன்கு உணர முடியும்.

திருமுறைக் கலாநிதி தருமபுரம் எஸ். ஞானப்பிரகாசம் அவர்களும், சிதம்பரம் டாக்டர் பத்மினி கபாலி மூர்த்தி அவர்களும் பாடி உருகியுள்ள திருவாசகப் பாடல்கள் நம்மை எல்லையற்ற பக்திப் பரவச நிலைக்குக் கொண்டு செல்கின்றன.

சைவத் திருக் கோயில்கள் அனைத்திலும், சைவ மெய்யன்பர்கள் இல்லங்களிலும் இருக்க வேண்டிய அரிய கருவூலம் ''மாணிக்கவாசகர்'' ஒலிப்பேழை என்பதில் ஐயமில்லை.

இவ்வொலிப் பேழையை உருவாக்கித் தந்துள்ள செந்தமிழ் வாரிதி முனைவர் இரா. செல்வகணபதி அவர்களுக்குத் தமிழ் கூறு நல்லுலகின் நெஞ்சார்ந்த பாராட்டுக்கள் என்றென்றும் உண்டு, உண்டு.

**ஒலிநாடா**
**கிடைக்கும் இடம் : ''செந்தமிழ் வாரிதி''**
**முனைவர் இரா. செல்வகணபதி**
எச். 15/2, கரிகாலன்தெரு,
கலாசேத்ராகாலனி,
பெசன்ட் நகர், சென்னை - 600 090.

**விலை ரூ. 50/-** (ஐம்பது மட்டும்).

## அருளாளர் இவர்தாம்

பக்கம் 11இல் கேட்கப்பட்ட வினாவிற்கு விடை:

மானிடர் வாழ்வைப் பொன்னாக்கும் மணிமொழிகளை அருளியவர் மகரிஷி நம் தாயுமானசுவாமிகள்.





சென்னை புரசைவாக்கம் அருள்மிகு சீனிவாசப் பெருமாள் திருக்கோயிலில் 15.01.03 அன்று திருப்பாவை விழா மிகச் சிறப்பாக நடைபெற்றது. ''திருப்பாவை'' ஒப்பிவித்தல் போட்டியில் வெற்றி பெற்றவர்களுக்கும் திருப்பாவை விரிவுரை மார்கழி மாதம் ஆற்றிய திருமிகு ராமமூர்த்தி அவர்களுக்கும் திருக்கோயில் இதழாசிரியர் முனைவர் த. அமிர்தலிங்கம் பரிசுகள் வழங்கிச் சிறப்புரை ஆற்றினார்கள். டாக்டர் செல்வி அனிதாராணி, எம்.பி.பி.எஸ் அவர்கள் விழாவிற்குத் தலைமை தாங்கிச் சிறப்பித்தார்கள். திருக்கோயிலின் பரம்பரை அறங்காவலர் திருமிகு எம். நடராசன் அவர்கள் விழாவிற்கான ஏற்பாடுகளைச் சிறப்புறச் செய்திருந்தார்கள்.

 பதிவு எண். TN/PMG (CCR) / 707 / 03-05/WPP No 451






மயிலை அருள்மிகு திருவள்ளுவர் திருக்கோயிலில் 16.1.03 அன்று திருவள்ளுவர் திருநாள் விழா மிகச் சிறப்பாக நடைபெற்றது. சென்னை மாநகராட்சி துணை மேயர் திருமிகு கராத்தே ஆர். தியாகராஜன் அவர்கள் இவ்விழாவில் பங்கேற்று திருக்குறள் ஒப்புவித்தல் போட்டிகளில் வெற்றி பெற்ற மாணவ மாணவியருக்குப் பரிசுகள் வழங்கிச் சிறப்பித்தார்கள். சென்னை மாநகராட்சி பத்தாவது மண்டலக் குழுத் தலைவர் திருமிகு ஆர். இராஜேந்திரபாபு, ''திருக்கோயில்'' இதழாசிரியர் முனைவர் த. அமிர்தலிங்கம், அறநிலையத்துறையின் சென்னை உதவி ஆணையர் திருமிகு பி. வாசுநாதன், எம்.ஏ., பி.எல்., திருக்கோயில் தக்கார் திருமிகு ஞானசம்பந்தம், திருக்கோயில் செயல் அலுவலர் திருமிகு மோகனசுந்தரம் ஆகியோர் இவ்விழாவில் பங்கேற்றுச் சிறப்பித்தார்கள்.

வெளியிடுபவர் : ஆணையர், தமிழ்நாடு அரசு இந்து சமய அறநிலைய ஆட்சித்துறை, சென்னை – 600 034.

ஆசிரியர் : கவிஞர் டாக்டர் த. அமிர்தலிங்கம், எம்.ஏ.பி.எச்.டி.,

அச்சிட்டோர் : பாவை பிரிண்டர்ஸ் (பி) லிட்., 142, ஜானி ஜான் கான் தெரு, சென்னை – 600 014.